தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் திங்கள் வெளியீடு

இருபத்தெட்டாம் துணர்

திருவள்ளுவர் யாண்டு ௲௯௮௩—௮௪

1952—53

பொழிற்றொண்டர் : அ. கணபதி.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகத்தில் பதிப்பிக்கப் பெற்றது.

தமிழ்ப் பொழில்.

இருபத்தெட்டாம் துணர்.

உள்ளுறை.

1. அடிகளாசிரியர், வித்துவான் திரு.
   உவமைகள், 195.
   கிராமங்களின் நிலை, 375.
   தாகந்தீர்த்த செழியன், 189.
   புலவர் பிணிபோன வரலாறு, 209, 229.

2. இரத்தினம், M. A., B. O. L., வித்துவான் பண்டிதர் திரு. கா. பொ,
   பசிதீர்க்கும் அமுத சுரபி, 267.

3. கார் அழகன், திரு. வேலூர்
   இளங்கோவடிகளும், சமய சமரசமும், 5.
   கவிஞன், 39.
   கற்பு, 87.

4. குஞ்சிதபாத தேசிகர், வித்துவான், திரு. M.
   பொருந்துமா, 17, 35, 163, 184, 213, 218, 347.

5. கோவிந்தராசன், வித்துவான் திரு. சி.
   ஓவியக்கலை, 361.
   கருந்திட்டைக்குடி கல்வெட்டு, 329.
   தஞ்சையில் நாயக்கர் ஆட்சி, 261.
   தஞ்சையும் இஞ்சியும், 285.

6. சுந்தரேசவாண்டையார், வித்துவான் திரு. வை.
   திருவேள்விக்குடி கல்வெட்டுக்கள், 271, 313, 339.

7. சுப்பராய பிள்ளை, திரு. ந.
உரை நுட்பம், 233.

8. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., திரு. K.
எப்படிப் பொருந்தும், 305.
கண்ணீரிலே கவலைச் சித்திரம், 359.
கிரனெயிற்றியார், 65, 119, 139,
திருமுருகாற்றுப் படை, 237, 299, 333, 365.
நக்கண்ணையார், 9.
பாரதியாரின் புலமை, 43.
பாரதியாரின் நாட்டுணர்வு, 169, 197.
முல்லை பூத்த முறுவல், 349.

9. தியாகராச பிள்ளை, G. M. V. C., திரு கோ.
ஆங்காங்கே, 19, 57, 61, 97, 151, 179, 207.

10. துரைசாமி பிள்ளை, சித்தாந்த கலாநிதி வித்துவான் திரு. ஔவை. சு.
திருவெம்பாவை, 89, 101.

11. நல்லொளியன், புலவர் திரு. நா.
கழற்சிங்கன், 109.

12. நித்திலன், திரு. வேலை.
இயற்கை அன்னை, 55.

13. பழநி முதலியார், M. A., புலவர் திரு. உ.
காவிரியின் கரையில் இலக்கியம், 221.

14. பழநியப்பன். திரு. அ.
பழமையைப் பழிக்காதே, 77.

15. பிள்ளை, திரு.ச. மு.
இசையறிவின் நலம், 219, 247.
உபாத்தியாயனியல்பு, 249, 297.
ஹெர்பர்ட் ஸ்பென்ஸர், 253.

16. பொழிற்றொண்டர் கருத்துரைகள்.
ஒரு வார்த்தை, 25.
கலைமகள் விழா, 161.
தமிழகம், 283, 321.
தமிழ், ஆந்திர நாடு பிரிவினை, 281
தமிழிலக்கிய மன்றம், 345.
தமிழ் நாட்டு எல்லை, 325.
நம்பொழில், 357.
துயரம், 2, 3, 131, 131, 323, 353, 354.
பதிப்புரை, 157,
பாராட்டு, 235, 328.
பிழைதிருத்தம், 150, 156.
புத்தாண்டு. 1.
பொங்கல் திருநாள், 282.
பொன் மொழிகள், 355.
மகிழ்ச்சி, 217.
மதிப்புரை, 185, 279, 353, 358.
வேண்டுகோள், 215.

17. மெய்கண்டான், திரு.
அரிஸ்டாட்டல், 85,
உமர்காயம் யாத்த ருபாயத், 81, 127. 133, 165.

18. விபுலானந்த அடிகள், அருட்டிரு,
தில்லிமாநகர்த் திருவமர்மார்பன் திருக்கோயிற் காட்சி, 31

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௮ | திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௩ நந்தன—ஆனி 1952—ஜூன் | மலர் ௩

ஆங்காங்கே (14)

திரு. கோ. தியாகராசன், G. M. V. C., தஞ்சை

ஒரு சொல்லிற்குப் பல பொருள்.

I. (1) **கண்**—பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் மக்களிடை முதன்மையாக உண்டாகிய பல சொற்களில் உடலின் உறுப்புகளின் பெயர்களும் இடம் பெற்றவை யென்பர். உறுப்புக்களில் ஒன்றாகிய 'கண்' இடத்தை அறியும் பொறி யாகும்.

(2) **கண்=இடம்**—இப் பொறியால் அறியப்படும் இடமும் 'கண்' எனனும் பெயர் பெற்றது. இதனைக் கருவி யாகுபெய ரெனலாம். அறிதற்குக் காரண மான பொறியின் பெயராகிய 'கண்' அறியப்படும் இடத்திற்கும் பெயராகியது என்பது கருத்து.

(3) **கண்=துளை**—நீர் வடியும் ஊற்றுக் கண்ணில் ஒரு துளை யுள்ளது. இத்துளை 'கண்' என்னும் பெயரேற்றது. எனவே, பல துளைகளுள்ள சாளரத்தின் கதவு 'பலகண்ணி' என்னும் பெயரேற்றது.

(4) **கண்ணி=கண்களையுடைய வலை**—பல துளைகளுள்ள காரணத்தால் வலை 'கண்ணி' என்னும் பெயரேற்றது. 'கண்ணி வைத்துப் பிடித்தல்' என்பது இப் பொருளை யுணர்த்தும்.

(5) **கண்=மூங்கில்**—மூங்கிலின் கணுவுக்கு மேல் ஒரு முட்டும், இம் முட்டை நீக்கினால் அதன் அடியில் ஒரு குழியும் உள்ளது. மற்றும் நம கண்களுக்கு அடியில் ஒரு எலும்பு முட்டி வளைந்திருப்பது போல் இம் மூங்கிலின் கண்ணிற்கு அடியில் ஒரு முட்டு வளைந்திருக்கிறது. (கணு) இக் காரணங்களால் கண்=மூங்கில் என்னும் பொருள் பெற்றது போலும்.

II. (1) ஆறு—மலையில் மழை பொழிய, அப் பெயலால் நீர் பள்ளத்தாக்குகளின் வழி கீழே இழிந்து தாழ்ந்த இடங்களில் ஓவடிர, இவ் வோட்டத்துடன பக்கங்களில் இழிந்தோடும் நீரும் சேர்ந்து ஒரு பெரிய நீரோட்ட மாகும். இந்த நீரோட்டத்திற்கு 'ஆறு' எனப் பண்டைத் தமிழன் பெயரிட்டான்.

(2) ஆறு=வழி—பின் இந் நீரோட்டம் வாணிபத்திற்கும், மக்கள் ஓர் ஊரிலிருந்து அடுத்த ஊர்களுக்குச் செல்வதற்கும் பெரு வழி யாயிற்று. எனவே, வழி. (எ-கா.) 'கான்யாற்று அத்தம'=காட்டாற்று நெறி (அ. நா. 137-3).

இப் பொருளை யேற்றே,

'ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை

போகாறு அகலாக் கடை' (தி. கு—478)

என்றனர் வள்ளுவர். ஆகாறு=ஆகும் வழி. போகாறு=போகும் வழி.

(3) ஆறு=தணி—ஆறு மக்களுக் குண்டாகும் நீர் விடாயையும், நிலத்தி லுள்ள வெப்பத்தையும் தணிப்பதால் 'ஆறு=தணி' என்னும் பொருள் பெற்றது. மக்கள் மண்வெட்டியை அமைத்து, நிலத்தில் கிணறு தோண்டி நீர் எடுத்த காலத்திற்கு முன் அமைந்த சொற்களிவை. (Language is the fossilised history of man.) எனவே, 'ஆறுவது சினம்' என்றனர் நம் ஒளவைப்பிராட்டி. 'காய் சினம்' என்பதும், கண்களில் பொறி பறக்கிறதென்பதும் சினத்தினால் நம் உடம்பில் வெப்பம் உண்டாகும் என்பதைக் காட்டும்.

உயிர் நீங்கிய உடலைச் சுடுகாட்டில் சுட்டெறித்த மற்றை நாள் 'காடாற்று' என்னும் சடங்கு நடக்கிறது. ஒரு நாள் இக் காடாற்று நடக்கு மிடத்தில் பலர் நின்றனர். இவர்களில் சிலர் கலை இளைஞன் (B. A.) பட்டம் பெற்றவர். நீர் ஊற்றி வெப்பத்தைத் தணிப்பதைக் காட்டி இது தான் 'காடாற்று' என்னும சடங்கு. வீட்டில் நடப்ப தல்ல என்றும, பால் தெளிப்பது என்பது பின் வந்த பெய ரென்றும் புகன்றேன். இக் கருத்தையே 'காடாற்றத் தண்ணீர் கேட்டால் கருமாதிக்குக் கொண்டு வருவான்' என்னும் பழமொழி விளக்கும். மற்றும், 'பசியாறு', 'களைப்பாறு' என்னும் சொற்றொடர்களும் இப் பொருள் விளக்கும். எனவே, ஆறு=தணி.

(தணி என்பதற்குத் 'தண்' பகுதி தண்=குளிர்ச்சி. தண்ணீர்=குளிர்ச்சி யுடைய நீர்.)

III. (1) பனி—பனிக் காலத்தில் வெளியில் பரந்து கிடக்கும் நுண்ணிய நீர்த் துளிகள் (Dew). ('துளி' என்பதற்கு 'துள்' பகுதி—'களி' என்பதற்குக் 'கள' பகுதி யாயினது போல. ஒரு சொட்டு (Drop) நீர் கீழே விழுந்து, அச் சொட்டு உடைந்து துள்ளிக் கீழே விழும் நுண்ணிய பகுதிக்குத் 'துளி' என்னும் பெயர். எனவே, 'துளி' என்னுஞ் சொல் நீரின் மிக நுண்ணிய பகுதியைக் காட்டுஞ் சொல்).

(2) பனி=குளிர்ச்சி. பனிக்குக் குளிர்ச்சி யுண்டு. எனவே, பனி=குளிர் என்னும் பொருள் பெற்றது. (எ-கா.)

'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇ' நெடுநல்வாடை வரி 1 பனிப்ப=குளிர்ச்சியாக.

(3) பனி=நடுக்கம். இக் குளிரால் உடல் நடுங்கும். எனவே, 'பனி'=நடுக்கம். (எ-கா.) 'மெய்க்கொள் பெரும் பனி நலியப் பலருடன்'. (நெடுநல்வாடை—வரி 7.)

(4) பனி=அச்சம். முன் காட்டிய நடுக்கம் அச்சத்தின் மெய்ப்பாடு. எனவே, பனி=அச்சம்.

IV. நம் பெண்கள் நெற்றியி லிடும் பொட்டுகளின் விளக்கம்

(1) கறுப்புப் பொட்டு—இப் பொட்டு பெண்களின் இளமையாலும், திருமண மாகாததாலும் கருக் கொள்ளக் கூடாத நிலையைக் காட்டும். (Denotes dormant state of fecundity) தமத நிலை. தமதத்தின் நிறம் கருப்பு.

(2) சிகப்புப் பொட்டு—சிகப்பு நிறம் வலிமையையும் ஆற்றலையும் குறிக்கும் நிறமாகும். எல்லா நாட்டினராலும் ஏற்கப்பட்ட கருத்து. இக் கருத்திற்கு அடிப்படைக் காரணம் குருதியின் சிகப்பு நிறமே. வலு வில்லாதவனை 'இரத்தம் செத்தவன்' என்கிறோம். இரத்தம் செத்த ஒரு சீனன், பன்றியின் இரத்தத்தைக் குருதியின தாரையிலிருந்து பீரிட்டடிக்கும் பொழுது ஒரு கலனில் பிடித்துக் குடித்து உடல் வலுப் பெற்றதை நான் அறிவேன் மக்க ளிறைச்சியை உண்ணும் காட்டு மிராண்டிகளிடை இக் கருத்து மிக உண்டு. எனவே, இவர்கள் தாமரைக்காயைச் (heart) சிறந்த உணவாகக் கருதுகிறார்கள். மேலும், நம் சிற்றூர்களில் ஆண்டிற்கு ஒரு முறை ஆடு வெட்டி அவ் வாட்டின் குருதியைச் சோற்

றுடன் கலந்து வானில் எறிவது, அவ் ஊர்த் தேவதை அந்தக் குருதி கலந்த உணவை உண்டு வலுப் பெறும் என்னும் கருத்துப் போலும்.

எனவே, நம் பெண் திருமணத்தின் பொழுது, அப் பெண்ணின் மணமகன் அப் பெண்ணிற்குச் சிகப்புப் பொட் டிடுவது (வடக்கே இப் பழக்கம் உண்டு), அம் மணமகள் கரு தரிக்கும் ஆற்றலைப் பெற்றாள் என்பதே. (Red denotes active state of fecundity).

ரஜ சத்தின் நிறம் சிகப்பு. (இக் காலத்தில் சிகப்புப் பொட்டிற் காகும் பொருளைக் குங்குமம என்கிறோம். இது பிற மொழிச் சொல். தமிழ்ச் சொல் 'ஞாழல்'. இச் சொல் வழக்கத்தி லற்றதற்கு காமே காரணம்)

(3) வெள்ளைப் பொட்டு—இப் பொட்டு தூய்மையைக் குறிப்பது, 'தூ' என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்கு வெள்ளை எனறு பொருள். (எ-கா,) 'தூத்துகி லுடுத்த தொடியுடைத் தடக்கை'. மேலும், 'வெள்ளை வெளேர்' என்பதற் கீடாகத் 'தூவெள்ளை'(Pure white) என்கிறோம். இவ்வாறாகத் 'தூ' என்னுஞ் சொல் தூய்மை (Purity) என் னும் பொருளேற்றது. ஆகையால் வெள்ளை நிறம தூய்மை யைக் குறிப்ப தாயிற்று. சில நாடுகளில் மணப் பெண்கள் வெள்ளை மூக்கா டிடுவார்கள். இது அப் பெண்ணின் கன் னித் தூய்மையைக் (Virginal purity) காட்டுவ தாகும் காம் நெற்றியில் வெண்ணீறணிவது அகத் தூய்மையைக் காட்டுவதாகும். மணவாள னிழந்த பெண்கள் வெள்ளை யுடை யணிவதும், வெள்ளைப் பொட் டிடுவதும் அவர்களின் மனத் தூய்மையைக் காட்டுவதாகும். சத்துவத்தின் நிறம வெண்மை. எனவே, இப் பெண்கள் காமத் துறையில் சத்துவத் தன்மை யடைந்தவராவர்கள். (By renunciation of sexnal relationship).

இவ்வாறாகக், கருப்புப் பொட் டிட்டவர்கள் திருமண மாகாதவர்க ளென்றும், சிகப்புப் பொட் டிட்டவர்கள் திருமண மானவர்க ளென்றும், வெண் பொட் டிட்டவர்கள் மணவாளனை இழந்தவர்க ளென்றும், பார்ப்பவர்களுக்கு கன்கு விளங்கும். ஆகையால் நம் பெண்கள் இவ் வழக்கத் தைக் கைவிடக் கூடா தென்பதே என் கருத்து.

கீரனெயிற்றியார்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

பொன்னி நன் னதி பாயும் சென்னி வளநாட்டில் சீரும் செல்வமும் கொழிக்கும் பேரூர்களில் மிகப் பழமை பெற்ற ஊர் கழார் என்ப தாகும். வெப்பமும் தட்பமும் ஒத்த நிலையிற் சீரான கடற் காற்றும் மழைக் காற்றும், இடையற்றும் இடையறுதும் இவ் வூரின்கண் வீசுதலான், அம் முகமாக மக்களே யல்லாது, மற்றைச் சிற்றுயிர்களும், புற் பூண்டு செடி கொடி மர வகைகளும் தழைத்து உயிர் வாழ்வதற் கேற்ற இயற்கை யமைப்புகளும், மிக்கதோர் வளமும் இவ் வூர் வாய்ந்திருந்தது. இஃதோ டமையாது வாரி யன்ன காவிரி யாறு இவ் வூரெங்க ணும் கால் விரிந்து பரவி நெல்லும் பொன்னும் கொழித்து வேளாண் குடி மக்கட்கு இயற்கை வாழ் வளித்து வந்தது. பல் முகமாகக் கொழுமை மேவி எம் மருங்கும் இயற்கை வளம் இணை யற்று விளங்கும் அழகிய இவ்வூர், வாழ்க்கை வளர்ச்சிக் கும் கலை யுணர்ச்சிக்கும் பிறப்பிடமாக யமைந்து நலனும் நாகரிகமும் பயவாநிற்கும். காவிரிக் கரையி லுள்ள இம் மூதூரில் அறவோர், அறிவர், துறவர், சான்றோர் முதலிய உணர் வாட்சி யுடையாரும், பாணர், கூத்தர், வேடர், இடையர், வலைஞர் முதலிய தொழிற் காட்சி வாய்ந்தாரும் தம்தம் செல்வச் செழுமையாலே செம்மாந்து வாழ்ந்து வந்தனர். பிறவியை நல முடைய தாக்க வல்ல அறிவாட்சியும் உழ வாட்சியு முடையராய் ஒப்புரவாளர் பலரும் நாட்டிற் பசியும் பிணியும் தலை யெடுக்க வொட்டாது யாவர்க்கும் உத விப் பலரோ டுண்ணும் நாகரிக வாழ்க்கை எய்தி யிருந்தனர்.

இத் தகைய வாறு அழகார்ந்த புகழ் மணக்க விளங்கும் கழாரின்கண், வள மிக்க தனிச் சிறப்புடன் வாழும் எயினர் குடியில் அறங் கரியாக அருள் சுரந் தூட்டும் நற் பழக்க நல் வாழ்க்கையிற் றிளைத்த பண்ணன் என்பார் ஒருவர் இருந்தனர். அறிவிற் சிறந்த இவர் நிலப் பகுதி மிக் குடைய பெருஞ் செல்வராயும் புல னழுக் கற்ற அரு ளொளி யுடையராயும் மிளிர்ந்தார். தம் மில் லகத்தே வருவார் பலரையும் இவர்

உண்பித்து பலரோ டுண்ணும் விழுமிய கோட்பாட்டினை யுடையவர். இவரது இல்லக்கிழத்தியார், விருந்தென்னும் வகையில் எவ் வகை மாறுபாடும் வேறுபாடுங் காணுதும் கருதாதும் அருளுணர்ச்சியிற் றலை சிறந்தவர். பழுமரங் களை நாடிச் செல்லும் புள்ளினங்கள் போன்று, எளிய மக்கள் அரிய வழி பலவற்றை நெடியது என்றெண்ணுது கடந்து இவரது இல்லம் வந்து அதனை ஊனுெலி அரவ முடையதாய் விளங்க வைப்பர். அதனுன் இவரது இல்லம் எவ் வகை யுயிர்க்கும் அருள் நிழலும், தூய்மை நலமும் மகிழ்ச்சியும் தந்து திகழ்ந்தது.

வாழ்க்கையின் துறைகளில் பயன் மிகக்கொண்டு, மெய் யுணர்வின ராய பண்ணன் வாழுங் காலை, அவருக்கு ஆற்றலும் அழகும் வாய்ந்த ஒரு பெண் மகவு பிறந்தது. மகவு பிறந்த நாளும வெள்ளணி யாயிற்று. இவ் வெள்ளணி நாளில் ஆடைத் தயிரொடு கலந்த சோற்றுத் திரளும், கட்டி வெல்லமும் மக்களுக்கு வழங்கப்பட்டது. அவர்கள் தயிர்ச் சோற்றினைக் கையி லேந்தி நிரை நிரையாகச் செல்லும் பாங்கு எறும்புகள் தம் தம் முட்டை யேந்தி திட்டை யேறும் ஒழுங்கினை ஒத்திருந்தது. மற்றும் பிறர்க்கு நலமானவை யாவும படைப்ப தும் பண்ணனுக்குக் கருத்தா யிருந்தது. படைப்புக் கடவு ளருக்கு ஆற்றலாக விளங்கும் செல்வியை யொப்ப இக் குழவி தோன்றியதினுன், கண்டார் யாவரும் இதனைக் கலைஞானத் தின் முதல்வி என அழைப்பா ராயினர்.

திருவுளச் செம்மை யுடைய செவிலித் தாயர் பெரு மகிழ்வோடு பாரித்து வளர்க்க, இம் மகவு போதி பொருந்திய திருமகளென்னத் திகழ்ந்து வந்தது. செவிலித் தாயர் பொன் வள்ளத்தில் அன்னத்தை யிட்டுக் கருத்தொடு ஊட்ட முற்பட, இக் குழவி உணவில் விருப்ப மில்லாது இயற்கை எழில் துறுமி விளங்கும் செடி கொடிகள் மலிந்து கிடந்த இல்லின் ஒரு புறத்தின்பால் மறுகி மறுகி ஓடி ஒளிந்து கொள்ளும். செவிலித் தாயர் மெல்லிய பூந் தழையினையுடைய கொடியைக் கோலாகக் கொண்டோச்சி அச்சங் காட்டி ஊட்டி வருவர். இரவிலும், சிற்சில வமயங்களில், வானி லுலக்கும் மாமதியினை வேண்டி உண்ணு தொழிவர். இத் தகைய தளர் நடைப் பருவத்தில், ஈரெயிறு முளைக்கு முன் அறிவு முதிர்ந்தா

ரெனக் கண்டார் வியப்புறச் சிறந்து விளங்கினார். முத்து நிரையை யொத்து உள் ளடங்கி வெள்ளியதாய் முளைக்கின்ற இவரது எயிற்றின் ஒளி பெருகும் விளைவை யறிந்த இவர் தம் பெற்றோர் உவகை மீக் கூர்ந்து எயிற்றியார் எனப் பெயர் வழங்குவா ராயினர்.

தளர் நடைப் பருவங் கழிய, களி மயிற் சாயலை யுடையார் நெடும் போ தெல்லாம் சிற்றில் விளையாடி மகிழும் பருவ முற்றார். தன்னை யொத்த நண்பியர்களொடு அம்மானைக் காய் கொண்டு ஆடி விளையாடியும், ஊசலாடி விளையாடியும். மென்சுனை நீரில் குடைந்து மகிழ்ந்தும் வருவா ராயினர். அப்பால் பள்ளிப் பருவம் வந்துற்ற காலை, இவர், கல்வி யாகிய மாரிப் பருவத்துப் பைங்கூ ழெனத் தழைத் திலங்குவா ராயினார்.

தமி ழிலக்கியப் புலமைச் சான்றோரிடத்தும் இலக்கண நூற்களில் ஆராய்ச்சி மிக்காரிடத்தும் இவர் கூடற் றமிழினைக் கற்றுத், தொல்காப்பிய நூலினையும் அதுவழி எழுந்த சங்க இலக்கியங்கள் யாவையும் நுனித் தறிவா ராயினார். தமிழ்க் கலைகள் யாவும் பண்டை யுணர்வா லுணர்ந்த எயிற்றியார், புலனறிவுகளால் உலகியற்கைகளின் ஒட்பத்தை ஆழ்ந்து கண்டும், திறனை ஆய்ந் துணர்ந்தும் மெய்ம்மை தெளிதலில் காலங் கழித்து வந்தார். கலை பயில் விதி முறையில் விளக்க முற்ற எயிற்றியார் தெளியும் புலமைக் கல்வியின் பயனை தொழிற் றுறைகளில், ஒளி யுடைய ராயினார். இதனால் இவரது உள்ளம் உண்மை அருள் விளக்கத்துக் கோர் உறை விடமாக அமைய, இவர் நல் லொழுக்கங் கண்டு, அவ் வழியில் ஒழுகி யாவர் மாட்டும் உவப்பத் தலைக்கூடி அளவளாவுதலில் பெருந் திற னுற்றார். ஆழ்ந் தகன்ற இத் தகைய பெரும் புலமை யுடையார் மாட்டு யாவரும் அன்பு கொள்வராதல் இயற்கை யாகும். இந் நிலையில் இவர் உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரியும் புலவர் தொழிலில் வல்லராய் வயங்க, இவர் தம் மியல்பாய நாநலனாலும் நடை யெழிலாலும் உணர்வைக் கனிந் தெழச் செய்யும் செவ் வறிவு பெற்றார். இத் தகைய வாறு உணர்வை மெய்ம்மையிற் செலுத்தி யாவரையும் இன் புறுத்தும் வகையாய்ச் செய்யு ளிசைக்கும் திறனும் விழுப் பேறும் இவருக்குத் தாமே வந்துற்றது. இதனால் இவ்

வறிவுச் செல்வி, உணர்வாட்சியில் மேம்பட்டவ ராகிக், கலை நலம் கழி மிகக் கற்றதனா லாய பெரும பயனையும் பெற்றார். மற்றும், தம் முளக் காட்சியான் அறிவதைத் தமி ழிலக்கிய வின்பத்திற் றோயச் செய்து, உண்மை நற் பொருளினைத் தேர்ந்து உவகையினை எய்துவர். இலக்கிய இன்பத்தோடு தெளி தமி ழிசைச் செல்வத்தையும் நுகர்ந்து எயிற்றியார் இசையில் வித்தகராய் வயங்கித் தம் மரபை விளக்குவா ராயினார். நாணம் முதலாய நாற் படையும இயல்பாய் இவரை வந் தடுத்த விடத்தும், கல்வியை வாழ்க்கை முத லாகவும் சிறப்பு நல மாகவும் கருதி முதிரக் கற்றலில் விழைவு கொள்வா ராயினார்.

இவ்வாறு எழில் மாண்பும் பெருந் தகவும் கொண்டு, கல்வி யறிவும் உணர்வும் சுடர்ந் தின்புறும் வகையில், மிக்க மதி வலி படைத்து எயிற்றியார் வாழும் ஒரு நாளில், விருந்தை விலக்க வொண்ணா உண்ணா நேரத்தில், விடாய்க்கு நீரொன்று அவ ரில்லம் நாடி வந்தான் ஆற்ற லுடைய ஒரு கட்டழகன். எயிற்றியாரது அன்னை சிறிதுங் களக்கங் காணாது 'நீரை உண்ணப் பண்ணுவித்து வா' என அருளுணர்ச்சியால் தம் மகளாரிடம் கூற, அவரும் யாதொரு மாறுபாடுங் கருதாது, பொலிவொடு வந்து நின்றானுக்கு மூரல் தோற்றா வகை முறுவல் விருந்து செய்து அது தந்து போந்தார்.

ஊழ் வயத்தால் எதிர்ப்பட்ட இவ் வீரன், கீர னெனப் படுவான். இகலும் செற்றமும் நீங்கிய உளச் செம்மை யுடையான். பெரு நீர்மை யளிக்கும் குலத்தினான். சோழ வேந்தர்க்குச், சொல்லிற் கீரர் என வழி வழியாகச் சிறந்து அமைச் சுரிமை யோச்சும் பெரு மரபில் பிறந்தவன். நல்லன பயக்கும் நூல்களைக் கற்ற கல்வி யறிவா னமைந்த காட்சியன். அன்பர்க்கு இன்புறு நெறியினை அருள்பவன். படைக்கலப் பயிற்சியில் சிறந்த செய லாண்மை மிக்க வீரன். களிற்று யானையின் மருப்பு போக அம்பு விடுக்கும திற லுடையோன். இவ் வகையில் கீருக் கீடாவார் யாரு மிலர் எனவும் போற்றப் படுபவன்.

பழகிய நட்புடையவன் போல், கீரன், நிலைபெறும் பெருங் கிழமையொடு எயிற்றியாரைக் கடைக்கண்ணுற் கொல்வான் போலவும் பின்னர்க் கொள்ளுவான் போலவும் நோக்கி புன்னகை புரிந்து அகன்றான். இருவர் நோக்கும் இயைந்த வழிக் காதலன்பு சிறந் தொளிர்ந்தது. இத் தகைய அரு நிகழ்ச்சி உரை கொண்டு இயம்பலுறும் வரை நிலையில தாய மாட்சி யுடைத்தென உணர்ந்தார் எயிற்றியார். ஒப்பனை செய்யப்பட்டுத் தாம் சிற்றில் புனைந்து சோறட்டி விளையாடுங் கால் முன் வந்து, இவன் தன் இளம் பிராயத்தில் சிறந்த அன்புடைச் சாயலராய், அதனைக் காலால் சிதைத்தும், மனம் நோவத் தம் கூந்தலில் செறுகிய மலர்ந்த பூ மாலையினை அறுத்தும், இன்ன பல பொறுக்கலாற்றாச் சிறு குறும்புகளை இயற்றினது இவர்தம் மனக்கண் முன் தோன்றியது. தோன்றவே, எயிற்றியார் தான் சுனையில், மெல்லிடை பொருது, நீராடுங் கால் இவன் அங்கு வளரும் காவிகளைப் பறித்துத் தன் மேல் எறிந்ததையும், அச் சுனைப் புனல்வாய் ஆடல் விருப்பால், பாய்ந் தாடுங் காலை அடி தளர்ந்து ஒரு மடுவில் வீழ்ந்து மறைய, இவன் தாமே வந்தெடுத்து உய்வித் ததையும் அன்னைக்கு எழில் மலர்ச்சியோடு கூறி அவர் செய்த உதவிக்குக் கைம்மாறுவது தான் அவருழைச் சார்த லாகிய தன் உடன்பாட்டைக் குறிப்பா னுணர்த்தி வேறுபட்ட நிலை யடைய லானார். அந் நேரத்தில் அவண் வந்த, குறி கூறும் குறத்தியும், எயிற்றியார் ஓர் இளஞ் சேயினைக் காதலித்தமை முன் கூறிப் பின் அவரே கடி மணம் புரிந்து கொள்வா ரென்பதை வற்புறுத்திக் குறி சொல்லுவா ளாயினள்.

சிற்றில் புனைந்த அறியாப் பருவத்தே கீரர் விருந்தாய் வந்த காலந் தொட்டு அவரையே தலைமகனாகத் தம் மகளார் கருதி யிருந்ததையும் அதனையே ஒழுக்கமாகக் கொண்டு கற்பினோடும் பெருமையோடும் மாறு கொள்ளாது வாழும் சீர்மையினையும் எயிற்றியாரது அன்னையார் தெளிந்து

கொண்டார். கதிர்ப்பு வேறுபாட்டால் தம் மகளிரது உள்ளத்தே கரந்த காதலன்பினை உணர்ந்த அன்னையார், களவொழுக்கத்தில் கண்டின்புறும் காதலிருவரையும் பின் அறத்தொடு நிலை நிற்குமாறு மேற் செய்ய வேண்டியவற்றைச் செய்ய முற்பட்டார். எயிற்றியாரது வித்தகஞ் சேர் மெல்லிய நோக்கையே விழுத் துணையாகக் கொண்ட கீரனுக்குக் களவொழுக்கத்தில், காண் தகு காதலியாரை மன மியைய உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதலு மியல் பாயிற்று. மென்மையும் தன்மையும் தளர, இல்லில் செயலற்றும் துயிலற்றும் உறையும் எயிற்றியாரைக் கண்ட அன்னையார், தங் கணவருக்குக், கடி மணத்திற்கு வழிகோலும் தம் மகளிரது காதல் வளர்ச்சியினைப் பற்றி அறிவுறுத்துவா ராயினர். 'பொதுவாக நோக்கின், துன்பந் தரும் சுரமாகிய வாழ்வில் ஓரோ வழி நம் மகளிர்க்கு நீர் வேட்டற்கு உதவும் தாமரைத் தடாகம் போன்றவர் கீரர். அவர் நலமுங் குலமும் முதலியவாற்றான் மணத்திற் குரிய ராவர். மேலும், பெருநயப்பு முதலியவற்றால் மிகப் பெரிதும் இனியரா யிருப்பவர்.' என எயிற்றியாரது அன்னையார் தங் கணவர்பா லுரைக்க, அவரும் கீரனாரது பெருந் தகைமையினை நோக்கித் தம் மனையாளரின் மொழியின் வழி நின்றார். சுற்றமும் அவர் வயப் பட்டு இதனை ஏற்றது.

எயிற்றியாரது மாண்புகளைக் கூறும் சிறந்த மொழிகளைப் பலர்பால் கேட்டுக் களித்த கீரரின் பெற்றோரது கருத்திற் கிசைய, கீரரும் தங் கேண் முன்னர்ப் பலரறிய மணத்திற்கும் உடன்பட்டார். படைப்புக் கடவுளரும், ஒத்த குலம் நலம் பண்பு கல்வி முதலியவாற்றான் சிறந்த செம்மலையும் செல்வியையும் ஒன்று கூட்டி அவ் வாற்றால் தனக் கிருந்த பழிப்பினையும் ஒருவாறு அகற்றிக் கொண்டார். கோற்றேன் போன்ற எயிற்றியாரை வாழ்க்கைத் துணையாகப் பெறற்குக், கீரரும், நூலுரை நுவலும் நோன்மையாளரோ எனக் கண்டார் வியக்கும் மேன்மை பெற்றார். நல்வினையும் விதி முறையும் ஒருங்கு சேர்ந்தாற்போல் இருவரும் தம் தம் தமர் மகிழவும் நன்னாளில் நாட்டினர் காண விதி முறை வழாது வதுவை கூடி இன்புற் றிருந்தனர். மணம் முடிந்த பின்றை, கழாரின்கண் ணுள்ள பெரும்பாலரும் எயிற்றியாரை, அக் காலத்து மரபுக் கேற்பக், கீர னெயிற்றியா ரென வழங்குவா ராயினர்.

எயிற்றியாரைத் தன் கணவரிடம் போக்கிய அவர்தம் பெற்றோரும் உறவின் முறை யானவர்களும் கீரனை நோக்கி, 'நின்னால் காதலிக்கப்படும் இவள் நின்னையே பற்றுக் கோடாக உடையவள். இவள் ஓரோவழி இடருறுங் காலத்து அதனை நீக்கக் கடவார் நின்னை யன்றி பிறிதொருவரு மிலர். உறு துணையா யிருந்து இவள்தன்னைக் கைவிட்டு நீங்காது இன்பமும் அமைதியும் பயந் துறைவாயாக!' என மொழிந்தனர். ஒருயிரை ஈருடலின் கண் பகுத்து வைத்தாற் போன்று எயிற்றியார்பால் தொடர்ச்சி யுற்ற மாட்சிமை யுடைய கீரனார், தமது செழுமை யுற்ற மாளிகையில் அவரோடு உட னுறைந்து நல்லறிவு நன் முயற்சிகட்கு வழியும் வாய்ப்பும் கோலி ஏற்ற மளிக்கும் இல்லறத்தின் திறத்தில் மன மூன்றி யிருக்க, எயிற்றியார் தங் கணவர்க் கடுத்தவை தமக்குற்றன வாகக் கருதும் பெற்றிய ராயினர். கணவர் தங் கருத்திற் கிணங்க அவர் யாதுரைப்பினும் மாறுரை பகராது அதனைச் செய்து முடிக்கும் ஆற்றலும் மாண்பு முடைய ராயினார். இசையும் இன்பமும் ஈதலும் இவை மூன்றும் இனிது சிறக்க இல்லி லிருந்து நல்லறஞ் செய்யும் கற்பினாளது முல்லை யரும் பன்ன எயிற்றினின் றொழுகிய நகை மாண்பினை உணர்ந்த கீரனார் அவர்பால் எல்லை யில்லாத அன்புடையராய் ஒழுகி அளவில் சுவை யுடைய மொழி பகரும் அவரது இயல்பினை வியப்புறுவா ராயினார்.

இவ் வண்ணம் எயிற்றியாரை அகலாது பலகாலும் கழி பெருங் காதல் கொண் டொழுகும் கீரரை, அவர் போர் முகத்துப் பயின்று சிறந்தவ ராதலான், காப்பன காத்துக் கடிவன கடிந்து குடி மக்களைப் புரக்கும் சென்னி நாட்டு மன்னன், தன் தானைத் தலைவாகக் கொண்டனன். மன்னரால் நன்கு மதிக்கப்படும் மாட்சி யுடைய கீரனார், அரசர் செய்யும் வினைகளுக்குச் சூழ்ச்சி சொல்லும் அருந் துணையா யிருந்தனர். கேண்மை கெடுமாறு ஒழுகுந் தன்மையினைக் கற்றறியாத கீரர், மறம் பொருந்திய சோழ மன்னரது அவையத்தே,

காவலர்தம் நாட்டுக் கணக்காய் வகையில் திறம்பெற்றவ ராயும், அறம் போற்றும் அருளாளராயும் திகழ்ந்தார். மற்றும், கண்ணுறும் நுண்ணிய தூசுகளைக் கை இயல்பாக விலக்குமாறு போன்று அரசர்க் குற்ற துன்பத்தை நீக்கும் வீரராயினுர் வீரர். இதனுன் வீரர் சோழ மன்னர் புகழும் விழுமிய பண்புடையராய் விளங்கினுர்.

சோழ மன்னன் தன் புகழை எங்கணும் நிலவும் வகை, தம் மேவலின் நடத்தி வருங் காலை, ஒரு நாள், இப் பொன்னி யத் துறைவனுக்குத் திறை கொடுக்க மறுத்து இது காறும் அவ னுணைக் குட் பட் டொழுகிய மலை நாட்டுக் குறு நில மன்னன் இன்னல் பல இழைத்தனன். இதனைக் கேட்ட அரசன் மறலிய சினங் கொண்டு அருள் பிறவாது கலங்கி நின்றுன், தன்னுழை அலுவல் ஏற்கும் ஏவ லிளைஞரைக் கொண்டு தன் தானைத் தலைவரை வரவழைத்தனன். அரசற் காக அமர் பல உடற்றி உற்றுழி உதவும் வீரனுர், அரசர்பால் செல்ல, அரசன் தன் ஆணைக் குட்பட்ட மலை நாட்டுக் குறு நில மன்னனை வென் றடக்கித் திறையும் கொணருமாறு தன் உள்ளக் குறிப்பைப் புலப்படுத்தினுன். பகை மன்னன்பாற் கொண்ட கூற்றத் தன்ன ஆறுச் சீற்றத்தைத், தழல் நிறம் கொள்ளும் அவனது செங் கண் வழிப் பொள் ளென அறிந்த வீரனுர், 'மன்னவர் மன்னனே! நின் கொற்றம் சிறக்க, சீற்றமும் தணிக. யான் சென்று மாற்றுனை வென் றடக்கித் திறையும் கொணர்வேன்.' எனக் கூறி, அரசரது சினத்தைக் களைத்து விட்டுப் போர் புரியும் வினையின் மேல் தம் மனத்தைச் செலுத்தியே தன் னில்லம் ஏகினுர்.

அரசரது அழைப்பாணையின் தன்மை யாதோவெனக் வீரனுரது வருகையை எதிர்நோக்கிக் கடைத்தலை நின்ற எயிற்றியார், தங் கணவரைக் கண்டு முக மலர்ந்து வர வேற்றுர். போருக் கேக மனம் ஒருப்பட்ட வீரர் அரு வில்லவர் போல் இல்லம் புகுந்தமையின் இவரது உள்ளம்

துயருற்றது. பெரியார் செய்யும் அருள் எதுபோதும் ஒரு பெற்றித்தாய் நிகழா தென்பதை யுணர்ந்த எயிற்றியார் யாதுங் கூறாது, அவ ரயலே தன் னுணர்வு சிறிது தளர நின்றார். நுண்ணிய நூல் பல கற்ற அறிவினாரது அகத்தில் அடுத்ததை முகத்தில் கண்ட கீரனார், 'என தருளின் கூறுபாடு எத் தன்மைத்தோ வெனக் கவலற்க. இல்வாழ்க்கைச் செல்வத்தை யுடையவர் வினைமேற் செலற்குப் பிரிவது இயற்கை. மலை நாட்டுக் குறுநில மன்னன்மீது படை யெடுத்துச் செல்ல என்னை அரசன் பணித்துள்ளான். யான் அப் பணியை மேற்கொண்டேன், போர் பொரும் முன் யானே, மாறுகொள் வேந்தரைச் சந்து செய்தற்கு இடை நின்றாரைப் போன்று, நின் வருத்தத்திற்கும் வேந்த னிட்ட ஆணையை மறுத்தற்கும் அஞ்சி ஒரு மருங்கினும் சாரத் துணிவு பெறாது வருந்துகின்றேன். இதனை நினக் குரைத்தல் சாலவும் விரும்பற் பால தன் றென என்னுளே அடக்கினேன். பிரிவது நினக்குப் பொருந்துவ தொன் றன்று என்பதை யா னுணர்வேன். இது கொண்டு நின் னெஞ் சுடையும் வண்ணம் இடரெய்தல் வேண்டாம்.' எனக் குறுக மொழிந்து, போர்வினை மேல் நீள நினைப்பு கொண்ட உள்ளத்தினராய் பிரிவினை அறிவிக்கும் அளவில் அகலா நிற்பர். அங்ஙனம் அகலுங் காலை மறுத்துக் கூறாது உடன்படுவதே கற்புக் கடம் பூண்ட மகளிரது கட னென உவந்து எயிற்றியார் தனது அருண் மிக் குடைமையினைப் புலப்படுத்தினார். ஆனால் காதலர் நெடிது பிரிந்திருந்துழி, அது குடிப் பழியா மெனத் தோன்றுவதினான், வசை யற்ற தங் குடிக்குப் பிரிந் துறைதல் இசையா தென வருந்தி நின்றார், தாது கொண்டிருந்த தாழிருங் கூந்தலார். மற்றும், 'செல்லாது இருமின்' என்றாலோ, அப் புல்லிய மொழிவழி தன்னைப் பழி வந்து மூளும் எனப் பழி யஞ்சும் பண்புடையராய்ப் பயந்தார். பிரிதலாற்றுதல் அரிது. 'அதுவும் இன்னாதது' எனக் கண் கலங்கினார்.

பிரிவி னுறும் துயரமதை, எயிற்றியார் மறைக்க முயன் றும், இவர்தம் நெஞ்சம் அவர்வழிப் பட்டிலது. காதலரை இடைவிடாது காணலான், தம்மாற் பயன் மிகக் கொண்ட இவரது கண்கள், காதலர் நீங்குவதா லுற்ற துயரத்தால், மழை போன்று நீரைச் சொரிந்தன. அழுகை நன் னிமித்த மன்மையின் அதனைப் புலப்படுத்தா வாறு, நீர்த்துளி சொரி யும் நீலப் பூ வன்ன இவரது கண்களைத் தம் காந்தட் பூ வொத்த கரங்களால் மறைத்துக் கொண்டார். அவ்வாறு நீரினை வெப்பமுடன் வடியாது மறைத்தும், துன்றிய கண்ணீர் அதனோடு தொடர்புற்ற தொண்டையினையும் கம்மச் செய்தது.

எயிற்றியார் தன் வாழ் வகையே இனி ஏதாந் தன்மை யது தான் என ஏங்குவர். இவ்வாறு துன்ப முழத்தற்குக் காரணம் தான் முன் செய்த தீவினையோ அல்லது காலத்து நீர்மையோ என வெய்துயிர்ப்பார். முற் பிறப்பி லியற்றிய தீவினையை இப் பிறப்பி லாற்றிய நல்வினை கெடுக்கு மென்பது தன் னளவில் காணப் பெற வில்லை யென வாட்ட மடைந்து தன்னையே நொந்தனர். ஒரோவழி கணவர்பால் 'உடன் வருவேன்' எனின், மறு புலத்துப் போ ரகத்தே எண்ணரும் பாசறையின்கண் பெண்ணுடன் உட னுறைதல் மர பன்று என்றும், தன்னுடன் ஏகுவது பொருந்துவ தாகாது என்றும் அவர் மறுப்பரே எனத் தனக்குட் டேறி மிகக் கலுழ்ந்தார், குணம் குற்றம் ஆகியவற்றைத் தெளியும் பருவ முறாதார் போன்று பிரிவின் துயரை நினைந்து பல பகர்ந்து புலம்புவார். மற்றும், செய்வ தறியாது மயக்க முற்றும் மடப்பத்தின் நிலையினை யெய்தினர். மலரும் மணமும் போல இதுகாறும் கணவரோ டுடனிருந்த எயிற்றியார் தம் மனதை ஒருவாறு தேற்றிக், கணவர் வெறாதபடி ஏற்றுக் கொண்ட வினையை இடையூ றின்றி இனிது முடித்துக் கடிது வரும் வண்ணம் அவரைப் பணிவொடு வேண்டினர்.

இதனைக் கேட்ட கீரனார், 'என் னுயி ரன்னாய்! கருதிய போரோ பெரிது. ஒரோவழி அது நெடுங் கால மளவும் நீட்டித் திருக்குமாயின், குறித்த பருவத்தில் மீளுதல் இயலாதவாறு ஆங்கு வைகவேண்டியதாக நேரும். அவ்வாறு நேரின் யான் என் செய்வல் எனக் கவன்றார். கீரர் வருந்துவதைக் கண்ட எயிற்றியார், 'நீவிர் வருங் காலம் வரை ஆற்றியிருப்பேன். ஆனால், குளிர் மிக்க கார்ப் பருவத்தும், பகலிர வெனப் பகா வொண்ணாக் கூதிர் பருவத்தும், நெடுவாடை வீசும் முன்பனி, பின்பனி என்ற பெரும் பருவங்களிலும் யான் தமியளாய் நோவாநிற்க நின்மனமும் ஒல்லுமோ? என நியல்பை அறியாதது போல் நும் வல்லரவின் எல்லையைக் காணாது ஐயுறும் பான்மையோ, போரப் புகும் போரின் வெம்மையினும் பெரிதா யுளதே! பேரமர் ஞாட்பினுள் நும் பேர் கேட்டுப் பெரிதும் உட்கி ஒதுங்குவர் பேராண்மை யுடையார் என்பதை யா னறிவேன். எளிதில் வென்றி தேரும் சூழ்ச்சித் திறனால் போரினைக் கடிது முடிக்கும் நுமது தகுதிப்பாட்டிற்கு இது போன்று கூறுவது சிறிதும் ஏலாது. வெம் போர் வினையினையே சிறப்பாகக் கருதி நாளும் பிரிந் துறை வாழ்க்கையினை நீ நயந்தனை! மனமார வினை முடித்த பின்னர் நெடிது காலம் நிற்றலை ஒழியு மாற்றை மட்டும் எண்ணினேன் யான,' என வெய்யவாகப் பெருமூச் செறிவார்.

அம்பு பட்ட மான் பிணைபோல் வருத்த முற்ற எயிற்றியாரை நோக்கி, 'கண்ணினுண் மணி அனையாய்! நின்பால் எனக்குளதாய காதலன்பு கடலினும் பெரிது. அது குறைபாடின்றி ஒரு பெற்றியே நிற்கும். பரிவுடன் பழகினார்க்குப் பிரிவு இன்னாதை தாகும். முன்னியது முடித்த ஞான்றே, கடிதின் மீள்வல். வீணே நைந்து வருந்துதல் எற்றுக்கு? கற்ற அறிவுடைய ராதலின் நீயே ஆய்ந்து ஏற்ற பெற்றி பட ஒழுகுவாய்! உன் மன நிலையினை நினைக்குந்தோறும் எனக்கு நகை தோன்றலானே, இனி யானே என்னை நகுவது ஏற்புடைத்து'. என அவரது துன்ப மெலாந் தீரும்படியும், உள்ளமும் குளிர்ப் பூறும் படியும் உகத்தவை உரைத்தனர். கீரனாரது இன்னுயிர் போன்று கலந்து இசைத்த அருள் தரும் சொற்கள், நாயகன் போர் வினை யாற்றி, மீளும் வரை நெஞ்சு நெகிழ்கிற பொறை யுடைமையினை எயிற்றியாருக்கு அளித்தன.

நற் சீலத்திற்கும் செம்மைக்கும் இசைந்த தான பொறை யுடைமையால், கணவர்பா லுற்ற காதலன்பு அறிவோ டியைந்த தெய்வத் தன்மையினை யடைய, எயிற்றியார், 'நின் வாய்மொழி வான் பொய்க்கினும் பொய்த்த தில்லை. மற்றும், அறத்தின் முறையினையும் ஒருகாலும் தவறிய தில்லை. அரச ரிட்ட பணியை மேற்கொண்டு குறித்த பருவத் தில் இனிது முடித்து மீள்வது நுமக் குற்ற கட னாகும், நுமக்கு அறத்தா லாய புகழ் கைகூடும். எவ்விதத்தும் நீவிர் வரு மளவும் ஆற்றி யிருப்பேன். எளிதில் வென்றி கண்டு வாகையுடன் வருவீர். எனச் சிந்தை களிப்பக் கூறி விடுத்தனர். காதலர் போகும் பொழுது அவர் பின்னே எவரும் உணரா வகையில், எயிற்றியார் புந்தி மகிழ்ந்து வணங்க, அவர்தம் செய்ய கரங்கள் கைகூப்பித் தொழாநின்றன.

(தொடரும்).

யாழ் நூல்

பேராசிரியர் விபுலானந்த அடிகளார், பதினன் காண்டு ஆராய்ந்து எழுதிய அரிய, சிறந்த இசை நூல்.

பொருள் பொதிந்தது. தோற்றம் பொலிந்தது.
விலை மலிந்தது.

மெல்லிய தாள்	தாள் உறை	15—0—0
	துணி உறை	18—0—0
தடித்த தாள்	தாள் உறை	18—0—0
	துணி உறை	20—0—0

அஞ்சல் செலவு வேறு,

பழமையைப் பழிக்காதே.

சுந்தரம் :— நாவுக்கரசு! ஏது மிகவும் ஆழ்ந்த ஆராய்ச்சியி லிருக்கிறாய். நான் உன் அருகில் வந்தது கூடத் தெரிய வில்லையே.

நாவுக்கரசு :— சுந்தரம்! மன்னிக்கவும். வந்து நீண்ட நேர மாகி விட்டதா? உட்கார். ஆராய்ச்சிக் குரிய பொருளைச் சொன்னால் சிரித்து எள்ளுவாய்.

சுந்தரம் :— என்ன அது? அவ்வளவு நகைச்சுவை பொருந்தி யதா சொல். கேட்கலாம்.

நாவுக்கரசு :— சற்று முன்பு ஏழைக் கிழவன் ஒருவன் பிச்சைக்கு வந்தான். சும்மா வராமல், 'வாழ்வாவது மாயம்; இது மண்ணாவது திண்ணம்.' என்று பாடிக்கொண்டே வந்தான். அதைக் கேட்டவுடன் என்னையும் அறியாது சிரித்து விட்டேன். பிறகு சற்று எண்ணி அதன் உட் கருத்தை அறியலானேன். அவ் வுயரிய கருத்தில் ஒன்று பட்டு மெய்ம்மறந்து விட்டேன்.

சுந்தரம் :— ஆழ்ந்த எண்ணத்தில் அமிழ்த்திய பொருள், அற்ப மானதுதான். பிச்சைக்காரன் அப்பாடலைப் பாடியிருந் தால் வெகு இனிமையாகத்தா னிருந்திருக்கும். பண் ணோடு பாடியிருக்க மாட்டானென்று நான் இகழ்ந்து கூறுவதாக எண்ணாதே. இரக்க மில்லார் மனத்தும் இரக்க முண்டாக்கி, ஏதேனும் கொடுக்கப் பாடும் பாட் டில் கொஞ்சமேனும் பொரு ளிருக்க வேண்டுவது இன்றி யமையாதது அல்லவா? 'வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்' என்று வீட்டு வாசலில் நின்று ஒருவன் பாடக் கேட்டால், கட்டாயம் வெறுப்புணர்ச்சி தா னுண்டாகும். 'ஆமாம் தம்பி! வாழ்வு மாயந்தான்; எல்லோருக்கும் தெரியும்; மண்ணாகப் போவதற்கு நாள் தொலைவி லில்லை; போ. மாயமாம் மாயம்; நீயும் மாயம்; நானும் மாயம்; வீடு, வாசல், மாடு, கன்று, மரம், செடி,

கொடி எல்லாம் மாயம்; கருத்தழிந்த அறிவிலாக் கூட்டத்தின் கடைசி ஓலம்! என்று இகழ்ந்து விரட்டுவர் மக்கள்.

நாவுக்கரசு :—சுந்தரம்! பிச்சை கேட்க வென்று அப் பாடலைப் பொறுக்கி எடுத்துப் பாடியிருக்க வேண்டாம் என்று வேண்டுமானால் சொல். அப்போது பொருந்தலாம். ஆனால் பொருளற்ற பாட்டு என்று மட்டும் கூறிவிடாதே. "எல்லாம் வல்ல இறை ஆற்றலின் உதவியால், இவ்வுலகில் பலருக்கு நன்றாற்றி, நன்மை யடைந்து வாழ நல்லதொரு வாய்ப்பைப் பெற்றிருக்கிறாய். நாளுக்கு நாளாக கென்று நாட் கடத்தாதே. வாழ்வு நிலையற்றது? நீரில் குமிழியெனத் தோன்றி, மிக விரைவிலே மறைந்து விடும். என்று எச்சரிக்கை செய்கிறார் ஆசிரியர் இவ்வுண்மையை அறியாது நீ கூடப் பலபடப் பேசுகிறாய் என்று நினைக்க வியப்பாக விருக்கிறது.

சுந்தரம் :—நாவுக்கரசு! மெய்ஞ்ஞான உணர்ச்சியுடன் பொருள் கண்டார்க் கன்றி மற்றவர்க்குப் புலனாகும் தன்மையிலலை, அப் பாடல். விளக்கம் கேட்டு, உண்மைக் கருத்தை உன்னி, உணர்வோர் அடையும் இன்பத்திற்கு அளவிராது. விரிவுரை கேட்டு நா னடைந்த இன்பத்தை, ஈண்டு விரிக்கத் திற னில்லை. எல்லோரும் படித்து இன்புற்று மகிழும் தன்மையில் விளக்கமாக அமையாமை குறிப்பிடத் தக்கது, கற்றோரும் மற்றோருங்கூட அப் பாடலை எள்ளி ஒதுக்குவதைக் காண்கின்றோமல்லமோ? இக் கருத்தே தோன்ற விரிவாக விளக்கிக் கூறியிருந் தால், எத்துணைச் சிறப்பாக இருக்கும்? பலரும் படித்துப் பயன் தெரிவர்.

நாவுக்கரசு :—சுந்தரம்! உயரிய கருத்துக்களை உள்ளடக்கி ஒரு சில வரிகளில் பாக்களாக அமைத்துப் பலரும் பாடி இன்புறச் செய்வதே கவிகளின் தெள்ளிய நோக்கம். ஒவ்வொன்றிற்கும் விரிவு காணும் முறையில் பாடப் புகுந்தால், அது பாக்களாக அமையாது உரை நடை போலவன்றோ உருவாகிவிடும்.

சுந்தரம் :—பலரும் புரிந்து கொள்ள முடியாத முறையில் பாக்களாக அமைத்து, அப் பாக்களின் உட்புதைந்து கிடக்கும்

கருத்தை விளக்கிப் பலர், பல விதமாக உரை எழுதி உரையாசிரியர்களின் மனப்பான்மைக்குத் தகுந்தவாறு நூலாசிரியர்களின் குறிக்கோளேயும் திரித்துக் கூறி, ஓயாத தடை விடைகட்கு இடனளிக்காமல் உரை நடையிலே உள்ளக்கிடக்கையை வெளியிடுவது சாலச் சிறந்த தல்லவா?

நாவுக்கரசு :—உனது கூற்று முற்றிலும் உண்மையே! உரைநடையிலே எழுதுவதைக் காட்டிலும் பாக்களாக அமைப்பது அருமை என்பது வெள்ளிடை மலே. இலக்கண இலக்கிய விதிகளைப் பிழையறக் கற்றுத் தேர்ந்தார்க் கன்றி, மற்றவரால் பாக்கள் அமைப்ப தியலாது. பன்னூல் பல ஆக்கி, பாரிற் சிறந்துப் பல்லாண்டு வாழ்ந்த நம் புலவர்கட்கு, உரைநடையிலே எழுதுவது அருமையன்று. விரிவான அளவில் விருப்பம்போல் வரைந்து குவிப்பதற்கு அறிவும், ஆற்றலும் இருந்தும், அஞ்ஞான்று போதிய வசதிக ளிலலாமையால் உள்ளத்தெழுந்த எழுச்சியை ஓரளவிற்குமேல் விளக்கி எழுத இயலவில்லே. இஞ்ஞான்று இயங்கும் அச்சுப் பொறிகளும், தாட் (காகிதப) பெருக்கமும இருந்திருக்க வில்லே. பனே ஓலேகளிற்றான் எழுத்தாணி கொண்டு எழுதியிருக்கிறுர்கள். பனே ஓலேகளேயும் ஓர் அளவிற் கதிகமாகச் சேர்த்து வைத்துப் பாதுகாப்பது மிகவும் அரியது. தமது உயர்ந்த நோக்கத்தைப் பலருமறிய வெளியிட முனேந்த பேரறிஞர்கள், விரித்துக்கூற வசதியில்லாமையால், சுருங்கக் கூற மூயன்றுர்கள். அம்முயற்சியின் அமைதியாக விளங்குவனவாம், நமது குறளும், நாலடியாரும், மேலும், மக்கள் உளத்தில் உரைகளேக் காட்டிலும் பாக்களே விரைவில் பதியுந் தன்மை பெற்றிருககின்றன. பொருள் தெரிந்தோ தெரியாமலோ, பாட்டுக்களே அடிக்கடி பாடிக் கொண்டிருப்பது மக்கட் பண்பு. என்றேனுமொரு நாள் அதன் உட்பொருள் தெரிந்து போற்றிப் புகழ்ந்து அதன் பெருமை யுணர்ந்து, செயலாற்றுவர். இயைந்த பண்புடன் இயற்றிய பாக்களில் கையாண்டிருக்கும் சொற்கள் அத்தனேயும், வெல்லுஞ் சொற்க ளென்பது நவில்தொறும் நவில்தொறும நயங்கண்டார்க்கு தெள்ளிதிற் புலனுதல் எளிது. மக்கட் பண்பினே ஆய்ந்தறிந்தே நம் பண்டைத் தமிழ்ப் பேராசிரியர்கள்

தம் நுண்ணறிவின்பாற் பட்ட உயரிய கருத்துக்களை, பல முறைகளாக விரித்து, பல் வேறு துறைகளிலும் தேர்ச்சி பெறப் பற்பல நூல்க ளியற்றி, என்றென்றும் அழியாத பெரும் புகழைப் பெற்றுவிட்டனர். ஆயிர மாண்டுகட்கு முன்னர் ஆக்கிய தனித் தமிழ் நூல்களின் பொருள் அறிய முடியாது திகைத்துத் திண்டாடும் தமிழர்கள், தம் அறியாமையை நினைத்து வருந்தி, 'தமிழ் வளர்ச்சி இன்றி அன்றிருந்த அளவிலேயே இருக்கிறதே' என்று கண்ணீர் விட்டுக் கதறியழாது, பழமையைப் பழித்துப் பகடி செய்து எள்ளுகின்றனர்,

சுந்தரம்:—நாவுக்கரசு! பொருத்திடுக. உணர்ச்சி மிகுந்த உன் வாய்மொழி கேட்டு களிபேருவகை கொண்டேன். பழமையின் சிறப்பை யறியாத தமிழர்கள் புதுமைப் பித்துக் கொண்டு மனம் போனவா றெல்லாம் பேசியும், எழுதியும் வருகிறார்கள். காலப் போக்கிற் கேற்றவாறு ஒரு சில மாறுதல்கள் இன்றியமையாதனவே. பழமையின் பண்பை முற்றிலும் மறந்து புதுமை என்று கூறி, வேற்று நாட்டாரின் பண்பைத் தழுவி நடந்தால், 'தமிழர்' என்று கூறிக்கொள்வதில் எவ்விதப் பொருளும் இராது. உலக மக்களின் நடை யுடை தோற்றங்கட் கொப்ப, கால அளவையும் கணக்கிட்டு, ஒரு சில மாறுதல்கள் செய்து கொள்ளவேண்டும் என்ற முடிவிற்கு வருகிறேன், உனது சொற்பொழிவைச் செவிமடுத்த பின்

நாவுக்கரசு:—என்ன சுந்தரம்? நான் இப்போழ்து சொற்பொழிவா நிகழ்த்தினேன்? மிகைபடக் கூறுகிறாய். இத்துணை நேரமும் பொறுமையாக விருந்து கேட்டுக் கொண்டிருந்தாயே. உனது தமிழ் ஆர்வந்தா னென்னே!

சுந்தரம்:— பேச்சு நயத்திலே நேரம் கழிந்ததே தெரியவில்லை. செவிக் குணவு நீ தந்தாய். பசிக் குணவு வேண்டாமோ? நான் போய்வருகிறேன். வணக்கம்!

நாவுக்கரசு :—சுந்தரம்! ஓய்வுள்ள போதெல்லாம் இங்கு வா. பயன் தரு நூல்களைப் படித் தின்புறுவோம். வணக்கம்!

உமர்காயம் யாத்த (ருபாயத்)

(மெய்கண்டான்)

பெர்ஷிய நாட்டு நற்கவியும் சிறந்த சிந்தனையாளரும் புரட்சியின் பிழம்பு மான உமர்காயம் உயரிய சொல்லோவியத்தில் உலகியலை—வாழ்வியலை—காதலியலை—கடவுளியலை இலங்கவைத்துப் படிப்போரனைவரையும் சிந்தனையில் மூழ்கடித்து மெய்யைக் காணும் மணிகளாகத் திகழ வைக்கின்றார். இவர் யாத்த ருபாயத், உலகுக்கே வழிகாட்டியாகத் திகழ்கிறது. இவர் பாக்கள் பைந்தமிழகம் அறியத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.

1

இரவாம் நிலத்திலிருந்து விண்மீன்களைத் தனக்கு முன்னே சிதறடித்த கதிரோன், விண்ணிலிருந்து அவற்றைத் துறத்துகிறான். அவனொளி சுல்தான் மாளிகையின் மீது பாய்கிறது. எனவே விழித்தெழு.

2

மருண்ட காலை மறையு முன்னர், சத்திரத்திலிருந்து ஒரு குரலைச் செவியுற்றேன். 'தயாராகி விட்டன யாவும் கோயிலினுள்ளே-வணங்க வந்தோன் மயங்கி வெளியே வீற்றிருப்ப தேன்?'

3

கோழி கூவிற்று; மதுக்கடை முன் னிருந்தோர் கூவினர். 'திறவுங்கள் கதவை! நாங்கள் எவ்வளவு சிறிது நேரம் காத்திருத்தல் வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒரு முறை பிரிந்தோமாயின் மீண்டும் திரும்போம்.'

4

இப்பொழுது புத்தாண்டு பழைய எண்ணங்களை நினைவுறுத்துகிறது; உணர்வுடைய உயிர், ஒப்பற்ற தனிமைக் கேகுகிறது; அவண் மரத்தின்மீதிருக்கும் மோசேயின் வெண் கை நீட்டப்படுகிறது; தரையிலே இயேசு இனிதே இலங்குகிருர்,

5

ஏனைய ரோசா மலர்களுடன் ஈராம் சென்ருெழிந்தார்; சம்சயாத்தின் ஏழு வளை கோப்பையை யறிந்தார் யார்? ஆனால் இனிய திராட்சையின் மணி மிளிர்கிறது; நீரோடைகள் பல சோலைகளில் பாய்கின்றன.

6

தாவீதின் வாய் மூடப்பட்டுள்ளது; எனினும் தெய்வீகப் பெல்வியின் குழலும், 'மது! மது! மது! செம்மது,' என ஊதுகிறது. இன்னிசை இரவுப் பறவையும் ரோசாவின் செந்நிறத்திற்கே கூவுகிறது.

7

வருக, மது வார்க்க. வெம்மைக் கால வெம்மையில் தண்மைக் கால மன இரக்கமாம் ஆடை மறைகிறது. காலமாம் பறவை பறக்க நேரமில்லை; ஆனால் சிறகு விரித்து உடனடியாக இருக்கிறது.

8

நைசாப்பூ ராயினும் அல்லது பாபிலோ ஞயினும் என்ன? கோப்பை இனித்தா லென்ன? கசந்தா லென்ன? வாழ்க்கை மது துளித் துளியாய் ஒழுகுகிறது; வாழ்க்கை இலை ஒவ்வொன்ருய் உதிர்கிறது.

9

ஆயிரம் ரோசா மலர்களை அதிகாலை கொணர்வதாய் அறைகிறீர்; ஆம்! நேற்றைய ரோசா மலர்கள் எங்கே? இவ் வெம்மைக் காலத்திய ரோசா மலர்களைச் சம்சயாத்தும் கைகாபாத்தும் எடுத் தேகட்டும்.

10

நல்லது; அம் மலர்களை அவர்கள் எடுத்துக் கொள்ளட்டும்; பீடுடைக் கைகாபாத்து அல்லது கைகோசர் இவர்களிடம் நாம் செய்ய வேண்டுவ தென்ன? சாலும், ஞசுத்தமும் விரும்பிய வண்ணம் கத்தட்டும் அல்லது அதீம் விருந்திற் கழைக்கப்படட்டும், நீ செவி சாய்க்காதே.

11

வறண்ட வனாந்திரத்தையும் வள முடைய நிலத்தையும் பிரிக்கும் இளமரக் காவிற்கு வருக என்னுடன்; அவண் அடிமை அரசன் யாவும் மறத்தல் வேண்டும்-பொன் முடியுடைய முகமதுவின் அமைதி நிலவுகிறது.

12

மர நிழலிலே மணி நூலும்—மது நிரம்பிய கிண்ணமும்—ரொட்டித் துண்டும்—என் காதலி என்னருகே கனிந்து பாடின் வனாந்திரமும் வானுலக மாகாதோ!

13

சிலர் இவ் வுலகப் புகழுக்கும், மற்றும் சிலர் வருங்கால அவ் வுலக இன்பத்திற்கும் விழைகின்றனர். வரும் வரவு வரட்டும்; செல்லும் செலவு செல்லட்டும்; தொலை தூர முரசின் குமுறலுக்குச் செவிசாய்க்க வேண்டாம்.

14

நம்மிடை மலர்ந்த ரோசா மலரைப் பார்! 'இதோ, இவ் வுலகில் மலர்ந்து மகிழ்கிறேன். என் மொட்டு முகிழ்த்ததும் அதன் களஞ்சியம் மலர்க்காவில் வீசப்படுகிறது.' என்று அது கூறுகிறது.

15

தங்கத்தைச் சேமித்து வைத்தவர்களும் மழைபோல் வாரிச் சொரிந்தவர்களும் ஒருங்கே மண்ணில் மறைகின்றனர். பொன்னா யிருப்பினும் தோண்டி எடுக்க வியலும்.

16

மக்களின் ஆசை யெலாம் சாம்ப லாகிறது. அல்லது கைகூடுகிறது; என்றாலும் அது மிக விரைவிலே பாலை வனத் தொளிரும் சின்னேரப் பனி யாகிறதே!

17

மக்கள் தங்கிச் செல்ல இரிந்தொழியு மிவ் வவனியாம் சத்திரத்திற்குப் பகல்—இரவு எனும் இரு சிறு வாயில்க ளுண்டு; சுல்தானுக்குப் பிறகு சுல்தான் பெரும் புகழுடன் திகழ்ந்து ஒருவர் பின் ஒருவராய் ஓடினரே.

18

மது மகிழ்வால் பெரும் புகழால் சிறந்த சம்சயாத்தின் நீதி மன்றத்தில் சிங்கமும், பல்லியும் உறைந்து கிடக் கின்றன; வீறுடை வேடுவனும் பராமின் தலையைக் காட்டுக் கழுதை உதைப்பினும், அவனது நிலைத்த உறக்கம் தடைபட இல்லை.

19

செங்குருதியிற் றோய்ந்த சீச ருடல் புதையுண்ட விடத் தரும்பிய ரோசா செந் நிற.மாக வில்லை; ஆனால் மெய்க் காதலால் கண்ணீ ருகுத்த மங்கையர் புதையுண்ட விடத் தரும்பும் ரோசா மலர்கள் மிகச் செந் நிறமுடன் மலர் வனத்தை அழகுற வைக்கின்றன.

20

புனல் கரை யோரத்தைப் பொலிவுற வைக்கும் பசுமை யுடைய திராட்சைக் கொடி மீது சாய்கிறோம்—மிக மென்மையாக அதன் மீது சாயவும்! அவ் வழ குடைய கரையில் எதினின்று ஒரு காலத்து அக் கொடி அரும்பிய தென்பதை அறிவார் யார்?

அரிஸ்டாட்டல்.

நட்பு பெரிதா?—நீதி பெரிதா?

(மெய்கண்டான்)

மேல்புலம் மேன்மை எய்தியமை கிரீசு நாட்டி லரும்பிய முப் பெரியார்களா லன்றோ! இவர்களி லொருவர் அரித்தாட்டல். பல பொருள்களைப் பெரிதும் ஆராய்ந்து தெளி வெய்திய அறிஞர். இருளிரியத் தெளிவு ஒளி ஏந்தியமையால் யாண்டும் தெளிவு பரவிற்று. இவர் பழுநிய (முதிர்ந்த) அறிவு பெற்ற சீலர். இவர் ஆராய்ச்சி, உண்மையும், வியப்பும் கொண்ட தெனின் மிகை யாகாது. நட்பையும், நீதியையும் அளந்தறிந்து கூர்ந்தாராய்ந்து நன் முடிவு கண்ட நல்லார். இவர் ஆராய்ச்சி கீழே கூறுதும்.

பண்புகளு ளொன் றாகிய நட்பைப் பற்றி ஆராய்தலியற்கை. வாழ்க்கைக் கின்றியமையாதது நட்பே. ஏனைய நல முடையோனும் நண்பரின்றி வாழ விரும்பான். செல்வம், அதிகாரம், பதவி முதலியன பெற்றிருப்பவர்களுக்கு நட்பினர் கட்டாயம் வேண்டற் பாலது. நண்பர்கட்கு முழு உரிமையுடன் அல்லது பெருமையுடன் நன்மை புரிவர். இம் முறைப்படி நன்மை புரியும் வாய்ப்பு மறுக்கப்படின் எத்தகைய உயரிய பதவியிலிருந்தும் என்ன பயன்? நண்பர்களின்றி பாதுகாப்புடன் அப் பதவிகள் நிலைக்குமா? மனித னெய்தும் முக்கியத்துவத்திற்கு முறிவும் உண்டு. வறுமையும் துன்பமும் எய்துங்காலை நண்பர்களே புகலிட மென்று கருதுகிறோம்.

இளமையில் தவறு செய்ய வொட்டாது தடுத்து உதவுகிறவர்களும், முதுமையில் ஆவன புரிந் துதவுகிறவர்களும், வாழ்க்கையில் முக்கியத்துவ மெய்துங்கால் நற்பணியாற்றத் தூண்டுபவர்களும், நண்பர்களே! தந்தைக்கும் மைந்தனுக்கும், மைந்தனுக்கும் தந்தைக்கும் உள்ள இயற்கைத் தொடர்பு நட்பெனக் கருதப்படுகிறது. இவை

பொதுவாகப் பறவைகளிடையும், விலங்குகளிடையும், சிறப்பாக மக்களிடையு முண்டு. இதனை யன்றோ மக்களின் நண்பர்களையும் இரக்க முடையவர்களையும் பெரிதும் போற்றுகிறார்கள். செலவிலும் ஒவ்வொருவரும் எவ்வளவுக் கெவ்வளவு நெருங்கி அன்புடன் விளங்குகிறார்கள்.

நட்பாகிய பிணைப்பு, பல நாடுகளைச் சேர்த்து ஒன்றுபடுத்துகிறது. நீதி முறையைவிட நட்பு முறையில் அதிகப் பலன் சட்ட மமைப்போரா லேற்படுவது கண்கூடு; எப்படி, எனின் ஒத்த கருத்து நட்புக் குடன்பாடு; ஆதலால் ஒற்றுமையை வளர்க்கப் பாடுபடுகிறார்கள். நாட்டிற்குப் பகையாகிய வேற்றுமையை விலக்க முயலுகிறார்கள்.

மக்களனைவரும் நண்பர்களாக விருப்பின் நீதி விலக்கற்பாலது; நீதியுடனிருப்பவர்கட்கு நட்பு வேண்டற்பாலது. மிக உயரிய நீதி நட்பின் தன்மையை எய்துகிறது. நட்பு இன்றியமையாதது மாத்திர மன்று; அது மிக உயர்ந்தது நண்பர்களைப் பெரிதும் அவாவும் மக்களைப் பாராட்டுகிறோம், பல நண்பர்க ளிருப்பதே சிறந்த தெனக் கருதுகிறார்கள். நண்பனா யிருப்பதே நல்லவ னாயிருப்ப தாகு மென்று கருதுகிறார்கள்.

அரித்தாட்டலின் மேற்படி ஆராய்ச்சி என்றும் நின்றிலங்கும் விளக் காகும். எவரு மேற்கும் பொதுத் தன்மையை எய்தியுள்ளது. இவர் தெளிவுரை உலக முய்ய அரண் செய்கிறது. நீதியைவிட நட்பு மேலான தென்றுரைத்த உயர்வு அரித்தாட்டலுக் குண்டு. நாடு நல முறுவதும், மன்பகை இன்புறுவதும், விலங்கினங்கள் ஒன்றுபடுவதும் நட்பென்றார். இவரால் கிரீசு நாட்டிற்கே தனிப் பெருஞ் சிறப்பு.

கற்பு.

(வேலூர்க் காரமுகன்.)

வியத்தகு வையத்தில் நிலவும் அறு வகை உயிர்களுள் தலையாயதா யிலங்கும் மக்க ளினத்திற்குச் சிறந்த தெது வெனிற் கற்பே. வட வாரிய தொண்மை நூல்களுள் மக்களுக் குரிய உயரிய ஒழுக்கமாம கற்பைப் பற்றிக் காண்கிரோ மில்லை. ஆனால் குமரி நாடு கடல் கொள்ளாக் காலத்தும பஃறுளி யாறு மறையாத காலத்தும கற்பின் மாண்பைச் சால்புட னறிந்து, அதற் குரிய பீட மளித்து இன்ப ஒளியையும்—அற ஒளியையும் ஏந்திய பெருமை ஒலகாப் புகழுடைத் தொல்காப்பியனுக்கே உண்டு.

ஒழுக்கமே உருவான ஒண்டொடியும் விழுப்பமே உருவான எழிலானும உளத்தா லொன்றி நாடறிய நனமணம் புரிதல் பெறற்கரும பெரும பொரு ளெனில் கற்பின் மாண் பென்னே! இருமைக்கு மேற்ற பொற்புடை அறத் துறை கற்பு நெறியே. தலைவனும், தலைவியும் ஒன்றுபட்டு வாழும் வாழ்க்கை தான் கற்புடைய வாழ்க்கை. கற்பு நெறியில் நின்று நலவாழ்வு நடாத்தின் வானுலரையும் தெய்வத்துள் இடமுண்டு. ஆதலால் வாழ்க்கை எனு மெழில் நிறை மலர் வனமாம் இல்லறத்தில் இனிதே வாழ்ந்து அறவோரையும், அந்தணரையும, துறவிகளையும, சுற்றத்தினரையும ஓம்பி மன்பதை சீர் பெற அறப் பணி யாற்றி நன மக்களை நல லுலகிற் களித்து இறைவனடி எய்தல் வேண்டும் ஆணும் பெண்ணும தனித்து வாழ்தல் வேண்டு மென்ற நியதி தமிழர்பால் என்றும் இருந்திற் றில்லை. இல் லறத்தி லெய்து மின்பமே நிலையான வீடுபேற் றின்பத்திற் றிளைக்க வைக்கும.

கற்பு பெண்கட்கு மாத்திர மன்று; ஆண்களுக்கு முண்டு. கால வழக்கில் பெண்கட்கே உரியதாய் மாறிற்று; என்றாலும், பிறர்க் குரியாள் தோள் தோயாதான் நல முடையவனென்றும், பிறர் மனை நோக்காமையே ஆன்ற ஒழுக்க மென்றும் வான்புகழ் இறவாப் புலவன் வள்ளுவன் துளக்க மற விளக்கிய தொன்றே சாலும். இன்பமும், பொருளும அறமும் தொல்காப்பியன் மரபில வந்த வள்ளுவன் அறம, பொருள், இன்ப மென்றுரைத் ததைத உற்று நோக்குகையில, தமிழ் வழக்கின் எழில் திகழ் கிறது. பிறர்மனை நோக்கா பேராண்மகனும், நிறையிற் காத்து, பிறர் நெஞ்சம் புகா நன் மங்கையும், சாவா வரம பெற பவக் கடல் கடந்து கடவுளடி எய்துவ ரென்பது திண்ணம்.

பைந்தமிழ் நாட் டரசனைப் புகழ்ந்த பெரும்புலவர், ‘கடவுள் சான்ற கற்பிற் சேயிழை மடவோன்........’ என்று கூறுகையில் கற்பு தெய்வத் தன்மை எய்தியதென்பது தேற்றம்; ‘கடவுட் கற்பின் மடவோள்’ என்று மற்றொரு புலவர் விதந்தோதியதை நினைக்குங்கால் பழந்தமிழ் சங்க காலத்து நிலவிய உயரிய ஒழுக்க நெறியின் மாண்பை என்னென்று கூறுவது? பளிங்கொத்த உளம பெற்ற பொய்யில் புலவாக ளியற்றும் செய்யுளுக்குக கற்பரசிகளே காரணம். கற்பரசிகளில்லையெனின் பெருங் கவிகள் பெருங் காவியங்க ளியற்றல் இயலுமோ? கண்ணகி இல்லை எனில் சிலப்பதிகாரம எங்ஙனம அருமபும்? மணிமேகலை இல்லை எனில் மணிமேகலை எங்ஙனம் மிளிரும? கற்புடைய காரிகையர் கணவனை யன்றி கடவுளை வணங்கார். வணங்கின் பீடு இழந்தவ ராவார்; இயம்பொணா இடர் அடைந்து தொடர்ந்து வரினும் இடர் இரிய இறைவனை வணங்கார். கோவலன் தன மனைவியைப் பிரிநத காலத்துக் கண்ணகி தனித்திருந்த பொழுது, தோழி காமக் கடவுளை வணங்கின் பிரிந்த கணவன் மீண்டும வருவா ரென்ற பொழுது கடவுளை வணங்குவது கற்புடையோருக்குப் பெருமை இல்லை என்றனள். கணவனுக்குத துன்பம வரினும் தொலையத் தெய்வத்திடை வணங்கும் மரபு தமிழகத்தி லில்லை. பொருள் பெறச் செல்லும் தலைவன் காட்டிடை ஏகுஙகால் வெம்மையான் வாடி நலிவ ரெனினும் சிறிது மழை பொழிய மேகத்தை வேண்டுவதும், சிறிது வெமமை தணியக் கதிரவனை வேண்டுவதும், சிறிது தண்மைக் காற்று வீச வளி தரு செல்வனை வேண்டுவதும், கற்புடையோருக்குப் பொருத்தமில்லை என்று ஒரு கற்பரசி கூறுகிறாள். ஆதலால், உயிரினும நாணம சிறந்தது; நாணினும் செயிர்தீர் கற்பு சிறந்தது என்று தொல்காப்பியனார் கூறினார்.

மணந்த தலைவன் தலைவியைப் பிரிந்து வினை முன்னிட்டு ஏகியும குறித்த காலத்து வராமையால், இன்புடன் வாழ்ந்த காலத்து ஒப்பற்ற தலைவர் கூறியதைக் கருதித் தேர்வடைகிறாள். கதிரவனின கொடுமையால் அடி தாங்க இயலாது இடர்ப்படுங் காலத்தும காட்டி லுரையும் யானைகள் நீர் அருந்த உலாவுகையில் சிறிய குட்டையி லுள்ள சிறிய நீரை யானைக் கன்றுகள் உண்டதின் மிச்சத்தை ஆண் யானை தன்னுடைய பெண் யானையை முதலில் உண்பித்துப் பின்னர்த்தானும உண்ணுமென்றும், ஞாயிற்றின் வெம்மையால் இலை யுதிர் காலத்துப் பெண் புறாவின் துயரை ஆண் புறா தன் மெல்லிய சிறகால் தணிக்குமென்றும, பகலவனின கடுமையால் மலையி லுள்ள மூங்கில்கள் வாடும் காலத்து கற்பாறையில் பெண் மான் நிற்க இயலாது வாடுமென்று ஆண் மான் தன் நிழல் கொடுத்துக்காக்குமென்றும்

திருவெம்பாவை.

சித்தாந்த கலாநிதி, திரு. ஒளவை. சு. துரைசாமி பிள்ளை,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

திருவெம்பாவை யென்பது பழந் தமிழ் நூல்களில் காணப்படும் பாவைப் பாட்டு வகை யாகும்; அஃதாவது, மகளிர் நீர்த்துறையில் பாவை யமைத்து நீராடி விளையாடுவது பொருளாக வரும் பாட்டு. பாவையை வண்டற் பாவை யென்றும, இவ் விளையாட்டை வண்டலாட்டு என்றும் வழங்குவ துண்டு. 'வண்டற் பாவை வௌவலின், நுண்பொடி அளை

எடுத்துரைத்த தலைவனின் தனிப் பெருமையை நினைந்த தலைவி தணந்தமையைப் பெரிதும மறக்கிறு ளெனின் அக் காலத்திய ஆண் மகன் உயரிய பண புடைய மனைவியை உயிரினும் சிறந்த தென்று மதித்து ஓம்பிக் காத்த பெருமை இஃதினும சிறந்ததாக இருக்குமோ ?

கற்பரசிகளுக் களித்த தனிச் சிறப்பு எவரும் பெற்ருர்க ளில்லை; பொருளுக் கிலக்கணங் கண்ட தொல்காப்பியன் அகத்திணையை முதலில் வைத்தமையும், துறவுக் குயர் வளித்த வள்ளுவன் இன்பப் பாலை யாத்தமையும், திருவாசகம் வரைந்த மணிவாசகர் திருக்கோவையை அளித்தமையும கூர்ந்து கருதின் பவக் கடல் கடந்து சாவா வரம பெற இல்லறத் தோணியைத் தலைவனும் தலைவியுமாகிய இருவரும் செலுத்த வேண்டுமென் றறிகிரும். தலைவனின் தனிச் சிறப்பு புகழ் புரிந்த மனைவியா லன்ருே ! பத்தினி இல்லோர் பல அறஞ் செய்யினும புத்தேள் உலகம் புக இயலாது என்றும், கற்புக் கடம் பூண்ட கண்ணகி தான் பொற்புடைய தெய்வம் என்றும், மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வ மென்றும, தாரமும் ஆகுவள் தத்துவ மாய் நிற்ப ளென்றும், பிற தெய்வங்கள் வணங்கும் சிவபரம் பொருளுக் கிணையானவ ளென்றும், புலவர் பெருமக்களும் துறவிகளும் பொன் னெழுத்தால் எழுதி இருக்கின்றன ரெனின் கறபின் பெருமை என்னே !

> காரிகை இல்லையேல் காவிய மேது ?
> ஒண்டொடி இல்லையேல் ஓவிய மேது ?
> நன்மங்கை இல்லையேல் நாடக மேது ?
> இளமகள் இல்லையேல் இல்லற மேது ?

இக் கடல் தூர்ப்போன்' (ஐங்-124) என வருவது காண்க. இவ் விளையாட்டுத் தைத் திங்களில் ஒருசிறந்த நீராட்டாகவும் சங்க காலத்தே நிகழ்ந்திருக்கிறது. இதைத் தைநீராடல் என்றும் அம்பாவாடல் என்றும் பரிபாடல் முதலிய நூல்கள் தெரிவிக்கின்றன. இந் நீராட்டை விரிந்த நூல் வல்ல சான்றோர் முன்னிருந்து தொடங்குவிக்கின்றனர். மண மாகாத மகளிர், 'வெம்பா தாக வியன்நில வரைப்பு.' இந்த அம்பா வாடலை மேற்கொள்ளுகின்றனர். மகப் பெற்று முதிர்ந்த மகளிரான தாயர்களும் முனித்துறை முதல்வியர் களும் சிறு மகளிர்க்குத் துணையாக முனினின்று இந் நீராட்டினை அமைத்துத் தருகின்றனர். இது பற்றியே இது 'தாயருகா நின்று தவத் தைந் நீராடுதல்' என்று குறிக்கப் படுகிறது. அழகிய பாவைகளைத் துறைக்கண் நிறுத்தி ஆடுத லாதலால் இது அம்பாவாடல் என்னு பெயர் பெற்றது. அம் பாவை யாடல் அம்பாவாடல் என மருவிற்றெனக் கொள்வது பொருத்தமாக இருக்கிறது.

பண்டை காலில் முழுத் திங்கள் வழியே மாதங்கள் கணக்கிடப்பட்டன, அதனால் மாதத்தைத் திங்கள் என்று குறிப்பது தமிழ் வழக்கம். பழந் தமிழ் நூல்கள் எல்லா வற்றிலும் 'மாதம்' என்ற சொல் காணப்படாது. அதன் பொருளே தோன்றத் 'திங்கள்' என்ற சொல்லே காணப் படுகிறது. பண்டையோரும் இக்காலையவரும் சித்திரைத் திங்கள் மார்கழித் திங்கள் என்று வழங்கியது இதுபற்றியே யாகும். பின்னர் இம் முறை மாறி ஞாயிற்றை வழியாகக் கொள்ளும் முறை யாயிற்று.

நாம் இப்போது வழங்கும் மார்கழித் திங்கள், பண்டை காலில் மார்கழி முழுமதி யனறோடு முடியும். மறு நாள் தொடங்கிய தைத் திங்கள், தைம மாதத்து முழுமதியோடு முடியும். பண்டையோர் மார்கழி முழு மதி யன்று ஆதிரை நாள் வந்து கூடுதலின், அந் நாளில் இப் பாவை விளையாட் டாகிய அம்பா வாடலைத் தொடங்கினர். அதனுல் இதனை மார்கழி நீராட் டென்றும் சில சான்றோர் வழங்க லாயினர், இந் நீராட்டு தைத் திங்கள் முழுதும் நடைபெற்றதனுல் சங்க காலத்தார் இதனைத் தைந்நீராடல் என்றே பலபடியாக எடுத் தோதி யிருக்கின்றனர்.

தைத் திங்கள் நீராட்டை மேற்கொண்ட மகளிர் வையைத் துறையில் நீராடிய நிகழ்ச்சியைக் கூற வந்த நல்லந்துவனார், இந் நீராட்டை நடக்கும் காலத்தை, 'பனிப்படு பைதல் விதலைப் பருவத்து, ஞாயிறு காயா நளிமாரிப்பிற் குளத்து, மாயிருந் திங்கள் மறுநிறை யாதிரை' (பரி-11:75-7) என்று குறிக்கின்றார். மாரிப்பிற்குளம் மழைக் காலத்து இறுதியாகிய மார்கழி என்றவாறு. மார்கழியைக் குளம் என்பது வான நூல் வழக்கு.

மார்கழி முழுத் திங்களும் திருவாதிரை நாளும் கூடிய நன்னாளில் இந் நீராட்டு விழா தொடங்குகிறது. இதனை அவர், 'குளத்து, மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை, விரிநூலந்தணர் விழவு தொடங்க,' (பரி. 11:76-8) என்று குறிக்கின்றார் அப்போது தாயருகே நின்று தைந்நீராடும் மகளிர் 'தைந்நீரே, நிறந்தெளிந்து நீராடற்குத் தக்கவாறு ஒழுகும் நீ, பிரியாத கணவரைப் பெற வருளுக. யாம் விரும்பும் கணவர் எல்லா நலங்களும் எய்துக. பிறப்பு தோறும் இடை யறுத நிலையில் யாம் கணவனும் மனைவியுமாய் மக்கட் பேறும் சுற்றமும் பெற்று நிலைபெற அருளுக, (பரி. 11:115-21) என்று வேண்டுகின்றனர். நீராட் டிறுதியில், இம் மகளிர்,

'இன்ன பண்பின் தைந் நீராடல்,
மின்னிழை நறுநுதல் மகள் மேம்பட்ட
கன்னிமை கனியாக் கைக்கிளை காம
இன்னியல் மாண் தேர்ச்சி இசைபரிபாடல்
முன்றுறை செய்தவத்தின் இம்முறை இயைநதேம்
மறு முறை அமையத்தும இயைக
நறுநீர் வையை நயத்தகு நிறையே'

என்று பாடி முடிக்கின்றனர். கலித்தொகை யென்னும் சங்க நூல், இத் தைந் நீராட்டினை வேறொரு வகையாக எடுத்துக் காட்டுகின்றது. தைந் நீராடல் என்பது ஒரு தவச் செயல்; இளமகளிர் பலர் தன்னைச் சூழ்ந்து விளங்க, மணத்துக்குரிய செவ்வி யெய்திய மகளொருத்தி நீராட்டிற் கேற்ற ஒப்பனை செய்துகொண்டு நீராடி அத் தவத்தைச் செய்கிறாள். அவ்வாறு புரியும் நீராட்டில், தன்னை யொத்த இள மகளிர் இல்லத்திற்குச் சென்று அரிசி சிறிது ஐய மேற்றுத் தொகுத்

துக் கொணர்ந்து நீர்த் துறையில் வந்து சேரும் 'புரிநூல் அந்தணர்க்குக்' (பரி. 11:79) கொடைபுரிகின்றனர். பின்பு தான் செய்து வைத்த வண்டற் பாவையாகிய மகனுக்குப் பிற னொருத்தியின் பாவையாகிய மகளை மணம் பேசித் திருமணம் செய்து ஏனை எல்லோர்க்கும் விருந்து செய்கின்றனர்.

'வையெயிற்றவர் நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
தையில் நீராடிய தவம் தலைப்படுவாயோ;
'பொய்தல மகளையாய்ப் பிறர்மனைப் பாடிநீ
எய்திய பலர்க்கீத்த பயம பயக் கிற்பதோ;
'சிறு முத்தனைப் பேணிச் சிறு சோறு மடுத்துநீ

நறுநுத லவரொடு நக்கது நன்கு இயைவதோ' (கலி. 59) என இதனைக் குறிஞ்சிக் கலிப்பாட்டு விளங்கக் காட்டுகிறது. ஐங்குறுநூற்றுச் செய்யு ளொன்று (84) 'நறுவீயைம் பால் மகளி ராடும், தை இத் தண் கயம்' என று குறிக்கிறது. இவற்றால் இந் நீராட்டுத் தைந் நீராடல் என்றே சங்க காலத் தில் மேற் கொள்ளப்பட்டிருந்தது தெளிவாம். மேலும், இக் குறிப்புக்களால், தைந் நீராடும் மகளிர் பலர் ஒருங்கு கூடி நீர்த் துறை சென்று விளையாடுவ ரெனபதும், செலலுங்கால் ஒவ் வொருவர் மனைக்கும் சென்று ஐய மேற்று வருவ ரென்பதும், ஐய மேற்றது கொண்டு விருந் தோம்பலும் அறவோர்க் களித்தலும், தத் தம் பாவைகட்குத் திருமணம் செய்து சிறப்பிப்பதும் சங்க காலத்து இளமகளிர் மேற்கொண்டிருந்த தைத் நீராடல் நிகழ்ச்சிகள் என்று அறிகின்றோம்.

இத் தைந் நீராட்டின் இறுதியில் சங்க கால மகளிர் செய்து கொண்டன எனப் பரிபாடல் குறிக்கும் வேண்டு கோளையே, மணிவாசகப் பெருமான் அருளிய திருவெம் பாவையில் காணப்படும மகளிரும செய்கின்றனர்.

'உன்னைப் பிரானாகப் பெற்ற வுன் சீரடியோம்,
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்'

எனவும்,

'எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்,
எம்கொங்கை நின்னன்பர் அல்லார் தோள் சேரற்க.'

எனவும் வேண்டுகின்றனர். 'வெம்பா தாக வியன்நில வரைப் பென' ப்பரிப்பாடல் மகளிர் வேண்டியது போலவே, ஆண்டா ளருளிய திருப்பாவையில் வரும் மகளிரும்,

'நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினல்,
திங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
நீங்காத செல்வம் நிறைந் தேலோ ரெம்பாவாய்'

என்று கூறுகின்றனர். இவ் வாற்ருல், திருவெம்பாவையும் திருப்பாவையும் சங்க காலத்துத் தைக் நீராடலையே குறித்து நிற்பது தெற்றென விளங்கும்.

இனி மாணிக்க வாசகப் பெருமானும், ஆண்டாளும் சந்திரன் வழியாகத் திங்கள் கணக்கிடப்படும் காலத்துக்குப் பின்னர் தோன்றியவர்கள். அவர்கள் காலம் இன்று போல் ஞாயிற்றின் செலவை அடிப்படையாகக் கொண்ட காலம். அதனல் இருவரும் 'போற்றியாம் மார்கழி நீராடலோ ரெம்பாவாய்' என்றும் மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னுளால் நீராடப் போதுவீர் என்றும் முறையே குறிக் கின்ருர்கள்.

இவ்வாறு திங்களைக் கணக்கிடும் கால முறையே யன்றி இத் தைநீராட்டு கொள்கையிலும் சில வேறுபாடுகள் இவர் கள் காலத்தில் தோன்றியிருக்கின்றன. இச் சான்ருேர் காலத்தில் சமய வொழுக்கங்களும் சமய வுணர்வுகளும் பெருகப் பரவின. பௌத்தம், சமணம், சாங்கியம், வைசேடிகம், சைவம், வைணவம் முதலிய சமயங்கள் தமிழகத்தில் தோன்றிவிட்டன. பழைய வழக்காறுகட்கு புது முறையில் ஒழுக்கங்கள் கற்பிக்கப்பட்டன. அந் நெறியில் தைக் நீராடல் மார்கழி நீராட்டாகி ஒரு நோன்பாகவும் மாறிவிட்டது. நெய், பால் முதலியன உண்ணுமை, கண்ணுக்கு மையெழுதல், கூந்தலில் பூமுடித்தல் முதலிய ஒப்பனை செய்து கொள்ளாமை ஒழுக்கங்களாயின. நீர்த்துறைக்கண் நிறுத்தப்படும் பாவை களை உமையம்மையாகக் கருதி வழிபடுவது இயல்பாயிற்று. திருமாலை வழிபடும் மகளிரும் மார்கழி நீராட்டில் பாவையைக் 'கௌரி' யாகக் கருதி வழிபாடு செய்ததைப் பாகவத புராணம் கூறுகிறது. பழஞ் செய்யு ளொன்று.

'சேயரி நாட்டமும் செவ்வாயும் அல்குலுமோ—அம்மானாய்
ஆய்மலரும் தொண்டையும் ஆழியந்திண்டேரும்—அம்மானாய்
மாயிருந்தானை மயிடன் தலையின்மேல்—அம்மானாய்
பாயின சீறடிப் பாவை பகவதிக்கே—அம்மானாய்,

என்று கூறுவது காண்க. இக் காலத்தே நிலவிய சமயச் சான்றோர்கள் தத்தம் சமயக் கருத்துக்களைப் பொது மக்களிடையே பரப்புவது வேண்டி மகளிர் விளையாட்டுக் காலத்தே பாடும் பாட்டுக்களின் வண்ணத்தில் புதுமுறையில் பல பாட்டுக்களைப் பாடினர். இந் நாளில் அரசியல் வாழ்வில் இயங்குவோர் தத்தம் கட்சிக் கொள்கைகளைப் புதிய புதிய வண்ணத்தில் பாட்டமைத்து விடுப்பதைக் காண்கின்றோம். இத் துறையில் மக்கட் பண்பு என்றும் ஒரு தன்மைதாகலின் விளையாட்டுப் பாடல் வண்ணத்தில் இடைக்கால மக்கள் தத்தம் சமயக் கருத்துக்களைப் பாடிவிட்டதில் வியப்பில்லை. யாப்பருங்கல வுரையும், தொல்காப்பிய வுரையும் காண்போர்க்கு இம் முறை பன்னெடு நாட்களுக்கு முன்பே தமிழகத்தில் தோன்றி விட்டமை நன்கு தெரியும்.

: ஏதங்கள் நீங்க எழிலிளம் பிண்டிக்கீழ்ப்—புருவே
வேதங்கள் நான்கும் விரித்தான் விரைமலர் மேல்—புருவே
பாதம் பணிந்து பரவுதும் பல்காலும்—புருவே,

என்பது முதலான வருவன ஆயிரத்து நூறு ஆண்டுகட்கு முன்னர் நிலவிய பாட்டுக்களாகும். இது பற்றியே சேக்கிழாரும் 'வண்டல் பயில்வன வெல்லாம் வளர் மதியம் புனைந்த சடை, அண்டர் பிரான் திருவார்த்தை அணைய வருவன,' என்று குறித்தருளினர். இவ்வகைய வழக்காறு கொண்டே மணிவாசகனாரும், திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொன்னூசல், திருப்பொற்சுண்ணம், திருப்பூவல்லி என்பன முதலியவற்றை பாடியருளினர். திருமால் அடியாருட் சேர்ந்த ஆண்டாள் திருப்பாவை பாடியதும் இந் நெறி பற்றியே தாம்.

இனி ஆண்டாள் அருளிய திருப்பாவை முதற்பாட்டில் மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளென்று மகளிரை யழைப்பதும், இரண்டாம் பாட்டில் பாவை நோன்புக்குரிய நெறிமைகளும் மூன்றாம் பாட்டில் மார்கழி நீராட்டால் விளையும் பயனும்-நான்கு ஐந்தாம் பாட்டுக்களில் மழையை வாழ்த்துவதும், திருமாலைக் கையால் மலர்த்தூவித் தொழுது வாயாற் பாடி மனத்தால் சிந்திக்க வரும் பயனும் கூறப்படு

கின்றன. ஆறும் பாட்டு முதல் பதினைந்தாம் பாட்டு ஈறுக உள்ள பத்துப் பாட்டுக்களில் மகளிரைத் துயிலெழும்புவதும், பதினாறும் பாட்டு முதல் இருபத்தைந்தாம் பாட்டு ஈறுகக் கண்ணனைத் துயிலெழுப்பி 'அருத்தித்து வந்தோம். பறை தருதியாகில் திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி, வருத்தமும் தீர்ந்து மகிழ்வேம்' என்று கேட்பதும், இருபத்தாறு இருபத்தேழாம் பாட்டுக்களில் மார்கழி நீராட்டத்துக்கென சங்கும் வாச்சியங்களும் பல்லாண்டு பாடுவோரும், விளக்கு, கொடி, விதானமும் பிறவும் நல்குக எனவும் இருபத்தேழாம் பாட்டில், சூடகம், தோள் வளை, தோடு, செவிப்பூ பாடகன் முதலிய அணிகலன்களும், ஆடையும் பெற்று, பாற்சோறும்

'நெய் பெய்து முழங்கை வழிவாரக் கூடியிருந்து குளிர்ந்துண்' டிருக்க வேண்டுமெனவும், இருபத்தொன்பதாம் பாட்டில்,

'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உற்றன்னோடு உற்றோமே யாவோம், உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்பதும் கூறப்படுகின்றன. இறுதிக் கண்ணதாகிய முப்பதாம் பாட்டு திருப்பாவைப் பாட்டு முப்பதையும் தப்பாமல் உரைப்பார், திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் என்று பயன் கூறி முடிக்கின்றது.

மார்கழி முழுத் திங்களன்று அம்பாவாடல் தொடங்குகின்றது. திருவெம்பாவை முதல் எட்டுப் பாட்டுக்களில் மணமாகாத இளமகளிர் ஒருவரை யொருவர் துயிலுணர்த்திக் கொண்டு நீர்த் துறைக்குச் செல்கின்றனர். ஒன்பதாம் பாட்டில் எல்லோரும் சேர்ந்து நீர்த் துறையில் பாவையை நிறுவிச் சிவபெருமானைக் கருதிக்கொண்டு,

'முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற வுன் சீரடி யோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்.
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்னவகையே எமக்கு எங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம்.'

என்று வேண்டிக்கொண்டு நிற்ப 'முனித்துறை முதல்வியர்'

எனப் பரிபாடல் குறிக்கும் தாயர் முற்போந்து பத்து பதினோராம் பாட்டுக்களில் சிவபெருமானது பரமாந் தன்மையை வியந்து 'பாதாள மேழினுங் கீழ்ச் சொற்கழிவு பாதமலர், போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே,' என்று காட்டி, 'ஏதவனூர் ஏதவன் பேர் யார் உற்றார் யார் அயலார் ஏது அவனைப் பாடும் பரிசு,' என்றும்

'ஐயா வழியடியோம் வாழ்ந் தோங் காண்,' எனவும்

'ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின், உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம், எய்யாமற் காப்பாய் எமை,' எனவும் பாடி நீராடலுறுகின்றார்கள். அத் தாயர் பக்கலில் இருந்து இளமகளிர் பலரும் பன்னிரண்டு முதல் பதினைந்தாம் பாட்டு ஈறாக நான்கு பாட்டுக்களில் நீராட்டயர்கின்றனர். பதினாறும் பாட்டில் இளையரும் முதியருமாகிய மகளிர் அனைவரும் மழை பெய்தல் வேண்டுமென மழையைப் பரவுகின்றனர். இந் நீராட்டு பெரும்பான்மையும் இளமகளிர் நல்ல கணவனை யடைந்து இன்பவாழ்வு பெறுவது குறித்து நிகழ்வதால் மழையை வாழ்த்துவது முறையாயிற்று. திருவள்ளுவர் கடவுள் வாழ்த்துக்குப் பின் வான் சிறப்புக் கூறியதும் இளங்கோவடிகள் மங்கல வாழ்த்தின் தொடக்க நிலையில் 'மாமழை வாழ்த்துதும்' என மழையைச் சிறப்பித்ததும், இந் நெறிக்கு அடிகோலித் தருகின்றன. பின்னர் முது மகளிரான தாயார் பதினேழு பதினெட்டாம் பாட்டுக்களில் தேவர்கட்கும் அவர் தலைவர்கட்கும் பெற முடியாத இன்பம் நம் பாலதாக நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளும் நம் பெருமானைப் பாடியாடுவோம் எனவும், விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக் கண்ணாரமுதமுமாய் நின்ற இறைவன் கழல் பாடி ஆடுவோம் எனவும் பரவி நீராடிக் கரை யேறுகின்றனர். அவருடனே கூடி நீரில் மூழ்கி விளையாடிய இளமகளிர் பத்தொன்பதாம் பாட்டில் முன்னர் ஒன்பதாம் பாட்டிற் செய்துகொண்ட வேண்டுகோளையே வேறு வாய் பாட்டில்

'எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்
எம்கொங்கை நின்னன்பர் அல்லார் தோள் சேரற்க
எம்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக் கெங்கோன் நல்குதியேல்
எங்கெழில் என் ஞாயிறு எமக் கேலோ ரெம்பாவாய்,'

என்று பாடுகின்றார்.

(தொடரும்)